உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்


e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

**மெயில் புக்**



விருப்ப சந்தா இதழ்

# கட்டிக்குளம் தவத்திரு சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 165-ஆம் ஆண்டு

# அவதார விழா சிறப்பு மலர்

அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாக வாழவேண்டும்



தமிழகத்தில் பிரசித்தி பெற்ற கருங்கல் கோவில்கள் திருப்பணிகள் செய்து



விருதுகள் பல பெற்ற ஸ்தபதி

என்றும்
சுவாமிஜி மாதாஜி
ஆசியுடன்...

சிற்பகலா ரத்னா, சிற்ப செம்மல்
தெளிச்சாத்தநல்லூர்
ஸ்தபதி A.சண்முகம்,
ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி திருக்கோவில்,
61/1, செட்டிய தெரு, மானாமதுரை, சிவகங்கை மாவட்டம்

கோவில் திருப்பணி வேலைகளுக்கு அணுகவும்
9443466481



aanmeegamalar.com







# சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் அற்புதங்கள்




மதுரை வடக்கு மாசி வீதியைச் சேர்ந்த தவ திரு இருளப்ப கோனார் தனது இருபத்தி ஆறாம் வயதில் ஆயுள் முடியும் என்றும் அதற்க்கு காசி ராமேஸ்வரம் சென்று பரிகாரம் செய்தால் ஆயுள் கூடும் என்று ஜோதிடத்தின் மூலம் அறிந்தார் இதனை தெரிந்த சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்திற்க்கு அழைத்து சென்று ஒரு மண்டலம் தவச்சாலைக்குள் சென்று தவ நிலை அடைந்தார் அப்போது தவச்சாலை மேல் பலகைகள் போட்டு மூடப்பட்டு இருந்தது 48 நாட்களுக்கு பிறகு அங்கு தவ நிலையிலையே இருளப்ப கோனாருக்கு உள்ளங்கையில் காசி, ராமேஸ்வரம் கோவில்களை காண்பித்து இனி எத்துன்பமும் இல்லை எனக் கூறி அருள் ஆசி வழங்கினார். தன் சீடரின் இறப்பு நிலையை தானே ஏற்று தன் அருளால் அதனை போக்கி ஆயுள் நீட்டித்து பல அற்புதங்கள் புரிந்தார்.

மார்நாடு கண்மாய் கரையில் யாருக்கும் தெரியாமல் சிவன், அம்மன் கோவிலும் மண் மூடி புதைந்து இருந்தது இதனை அறிந்த சுவாமிகள் அவ்வூர் மக்களுக்கு தெரிய படுத்திய போது சுவாமி கூறிய இடத்தில் மணல் மேடுகளை அகற்றிய போது சிவன் கோவில் தென்பட்டது. அதன் பின் சுவாமி அருள் வாக்கின் படி கோவிலை சீரமைத்து கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு இப்போதும் பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர்.

சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் ஒரு முறை நாகபட்டினத்தில் திருமுருக கிருபானந்தவாரியாரை சந்தித்த போது சுவாமிகள் வாரியாரை பார்த்து உன் பேச்சை பணம் கொடுத்து கேப்பாங்க உன் சொற்ப்பொழிவை கேக்க ஏராளமானோர் கூடுவார்கள் ஆன்மீக பணியில் உன் தொண்டு உலகத்திற்கே இன்றி அமையாதது பல தொண்டுகள் செய் அப்பு என்று ஆசி வழங்கினார்.

சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் மாயமாய் மறையக்கூடிய தன்மை பெற்றவர் ஒரே நாளில் ஒரே நேரத்தில் பர்மா உட்பட தமிழகத்தில் பல்வேறு ஊர்களில் காட்சி அளிக்கும் வல்லமை பெற்றவர் என பக்தர்களால் கூறப்படுகிறது. கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில் அமாவாசை, பவுர்ணமி அன்று நடத்தப்படும் யாக வேள்வியில் ஜோதி ரூபமாக பக்தர்களுக்கு காட்சி தருகிறார் இதை பார்த்த ஏராளமான பக்தர்கள் தங்களது செல்போனில் போட்டோ மற்றும் வீடியோவாக எடுத்து வைத்து வழிபடுகின்றனர்.

சுவாமிகள் தான் செல்லும் இடங்களில் எல்லாம் கல்லிலும் முள்ளிலும் கற்றாழை செடியிலும் படுத்துக் கொண்டு பக்தர்களுக்கு ஆசி வழங்கினார் அவர் சென்ற இடங்களில் எல்லாம் முள் படுக்கையே விரும்பினார் அப்போது கூறும் அருள் வாக்கினால் ஏராளமான பக்தர்கள் நல்ஆசி பெற்று நற்பயன் அடைந்த தாகவும் பக்தர்களால் கூறப்படுகிறது. அவர் சென்ற இடங்களில் எல்லாம் தற்போது அன்னதான மடங்களாக உள்ளது.

சித்தரின் ஜீவ சமாதி திருப்பரங்குன்றம் திருகூடல் மலையில் உள்ளது இங்கு ஆண்டு தோறும் குருபூசை விழா நடைபெறும். சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளால் நிறுவப்பட்ட நவநீத பெருமாள் ஆடி பவுர்ணமி பெரு விழா வரும் ஆகஸ்ட் மாதம் 12 ம் தேதி வெள்ளிக்கிழமை மதுரை ஆரப்பாளையத்தில் இருந்து புறப்பட்டு சுமார் 25 ஊர்களில் வலம் வந்து வரும் செப்டம்பர் மாதம் 04 ம் தேதி திருகூடல் மலைக்கு வந்து சேருகிறது சுமார் 24 நாட்கள் நவநீத பெருமாள் வலம் வரும் போது ஏராளமான பக்தர்கள் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளே நேரடியாக தங்கள் ஊர்களுக்கு வருவதாக வணங்கி வரவேற்பு கொடுப்பார்கள்.





# கட்டிக் குளம் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர்

## ஓடும் ரயிலை நிறுத்தி ஆங்கிலேய அதிகாரியை திகைக்கவைத்தவர் காசி, ராமேசுவரத்தை கையில் காண்பித்த மகான்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கட்டி குளம் பகுதியில் உள்ள திருவேட்டை அய்யனார் கோவில் பூசாரியாக இருந்த குப்பமுத்து வேளார் இவருக்கு நீண்ட நாள்களாக குழந்தை இல்லாமல் இருந்தது ஒரு

நாள் குப்பமுத்து வேளாரும் மனைவி கூத்தாயி உடன் அங்கு உள்ள ராமலிங்க சுவாமி கோவிலில் நீண்ட நாள்களாக தங்களுக்கு குழந்தை இல்லதை கூறி தங்களுக்கு தெய்வ குழந்தை வேண்டும் என்று மனமுருகி வேண்டி னார். அதன் பலனாக 1858 ஆம் ஆண்டு ஆடி மாதம் பூராடம் நட்சத்திரத்தில் பூசாரி குப்பமுத்து கூத்தாயி தம்பதியர்க்கு அழகிய குழந்தை பிறந்தது அக்குழந்தைக்கு மாயாண்டி சுவாமி என பெயர் இட்டு வளர்த்தனர.

சாதாரண குழந்தையாக வளர்ந்த மாயாண்டி சுவாமி தன்னுடன் இருந்த தெய்வீக சக்தி வெளி உலகத்திற்கும் தந்தைக்கும் தெரிய ஆரம்பித்தது ஒரு நாள் குப்பமுத்து வேளார் தன் மகன் மாயாண்டி சுவாமியுடன் திருவேட்டை அய்யனார் கோவிலுக்கு பூஜை செய்த போது கோவில் முன்பு விளையாட சொல்லிவிட்டு பூஜை பணிகளை செய்து கெண்டு இருந்தார்.

அப்போது வெளியே விளையாடி கொண்டிருந்த மாயாண்டி சுவாமி கழுத்தில் நல்லபாம்பு சுற்றிக்கொண்டு இருந்தது வீதியில் சென்ற மக்கள் சிறுவன் மீது ஏறிய பாம்பை கண்டு அலறினார்கள் பூஜையை முடித்த குப்பமுத்து வேளாரும் மகன் மீது பாம்பு சுற்றியதை பார்த்து திகைத்து நின்றார் அடித்தால் கடித்து விடுமோ என்று பயந்து கூச்சல் போட்டனர் கூச்சலை கேட்டு திரும்பிய மாயாண்டி சுவாமி தன் மீது சுற்றி கொன்டிருந்த நல்லபாம்பை பார்த்து கொஞ்சம் இறங்கி போறிங்கலா நாக ராஜா என கூறிய உடன் இறங்கி அருகில் உள்ள புதரில் சென்று மறைந்தது.

பாம்பை கண்டு பயந்த தந்தையிடம் தினமும் என் நன்பன் நாகராஜனிடம் விளையாடிக்கொண்டு இருந்தேன் என்று சிரித்த முகத்துடன் கூறினார்.

இதை போல் மாயாண்டி சுவாமி தாயார் வீட்டிற்கு முன்னால் நெல்லை அவித்து காய போட்டு பின் காக்கைகள், குருவிகள் வராமல் நெல் கதிர்களை பார்த்துக் கொள்ளும் படி கூறி விட்டு குளத்திற்க்கு சென்று விட்டார்.

அப்போது ஏராளமான பறவைகள் தானியங்களை சாப்பிட்டு கொண்டு இருந்தது இதை மகிழ்ச்சியுடன் பறவைகளை விரட்டாமல் பார்த்து கொண்டு இருப்பதை தாய் கூத்தாயி மகனிடம் கோவம் அடைந்தார்.

உடன் மாயாண்டி சுவாமி பறவைகளை மயக்கம் அடைய செய்யவா என கேட்ட போது, மகன் அறியாமல் கேட்கிறான் என நினைத்து தாயார் சரி என்கிறார்.

உடனே தியான நிலையில் அமர்ந்து பறவைகளை பார்த்து ஏதோ கூற பறவைகள் முழுவதும் மேலிருந்து விழ ஆரம்பித்தது. பயந்த தாயார் கூத்தாயி பறவைகளை பறக்கவிடு நான் விளையாட்டாக கூறினேன். என்று கூறிய மறு நிமிடமே தாயின் கட்டளைபடி மாயாண்டி சுவாமி மயங்கிய பறவைகள் துள்ளி எழுந்து பறந்து சென்றது.

இப்போதும் கட்டிகுளம் மாயாண்டி சித்தரின் கருப்பனேந் தல் மடத்தில் கல்நடைகள் மேய்வதற்காக வயலும் தண்ணிர் தொட்டியும் உள்ளது. ஏராளமான பறவைகளும் வந்து செல்லுகின்றன.

இப்போதும் மடத்தில் பல இடங்களில் குருவி கூடு களை காணலாம் மாயாண்டி சுவாமி தினமும் மதுரை மற்றும் பல்வேறு இடங்களுக்கு சென்று ரயில் மூலம் மானா மதுரைக்கு வந்து கொண்டு இருந்தார்.

அப்போது ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இருந்த ஆங்கி லேய டிக்கெட் பரிசோதகர் குந்து காலிட்டு தியானத்தில்

இருந்த மாயாண்டி சுவாமியிடம் தலையில் பென்சிலால் தட்டி டிக்கெட் கேட்கிறார். கண் விழித்த மாயாண்டி சுவாமி சிரித்து விட்டு மீண்டும் தியான நிலைக்கு செல்கிறார். கோபம் அடைந்த அதிகாரி உதவியாளரை அழைத்து சிறிய ரயில் நிலையத்தில் நின்ற போது இறக்கி விடப்பட்டார்.

சிரித்த முகத்துடன் அருகில் இருந்த மரத்தின் கீழ் தியானத்தில் அமர்ந்தார். அவர் பயணம் செய்த ரயில் புறப்படவில்லை ரயில் நிலையத்தில் உள்ள பணியாளர்களும் ஏன் என்று திகைத்து கொண்டு இருந்தனர்.

பிற பெட்டிகளில் இருந்த பொது மக்கள் தியானத்தில் இருந்த மாயாண்டி சுவாமியிடம் காலில் விழுந்து ஆசி பெற்று சென்றனர். அப்போது சிலர் டிக்கெட் பரிசோதகரிடம் மகா சித்தர் மாயாண்டி சுவாமி பயணம் செய்தால்தான் ரயில் புறப்படும் என தெரிவித்தனர்.

பின் டிக்கெட் பரிசோதகர் மாயாண்டி சுவாமியிடம் மன்னிப்பு கேட்டு ரயிலில் பயணம் செய்யுமாறு கேட்டு அமர்வதற்கு இருக்கையும் ஏற்பாடு செய்கிறார். மாயாண்டி சுவாமி அமர்ந்தவுடன் ரயில் புறப்பட்டு மானாமதுரை செல்கிறது.

இதை அறிந்த ஏராளமன மக்கள் சுவாமியை வரவேற்க திரண்டனர். அதே ரயிலில் ஆய்வு பணிக்காக ராமேஸ்வரம் வந்த ஆங்கிலேய உயர் அதிகாரி சுவாமியின் மகிமையைக் கண்டு உங்களுக்கு என்ன வேண்டும் என கேட்க இறைவனிடம் சரணாகதி ஆகும் என்னை போன்ற சாதுகளுக்கு இலவசமாக ரயில் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து வாய் மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, இப்போதும் சாதாரண பெட்டிகளில் சாதுக்கள் அகோரிகள் ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடம் செல்ல பயணம் செய்கின்றனர். டிக்கெட் பரிசோத கர்கள் ரயிலில் கிழே அமர்ந்து இருக்கும் காவி உடை அணிந்த முதியவர்களிடம் டிக்கெட் கேட்பதில்லை.

ஒருநாள் சுவாமிகள் மதுரைக்கு அருகே ஒரு சிறு கிராமத்தில் வசித்த பிராமணத்துக் தம்பதி யினரின் இல்லத்திற்குள் திடீரென நுழைந்தார். அத்தம்பதியினரிடம், "உங்களுக்குப் பத்தாவதாக ஒரு பிள்ளை பிறக்கப்போகிறது. அதற்குச் சுப்பிரமணி என்று பெயர் வை.

ஆனால் அவன் சில காலம் மட்டும் உங்களுடன் இருப்பான். பின்னர் அவனை இந்த உலகமே கொண்டாடும்" என்று ஆசி வழங்கினார். அதன்படி பிறந்த சுப்பிரமணிதான் பின்னர் சுவாமிகளிடம் தீட்சை பெற்று 'சாந்தானந்த சுவாமிகள்' ஆனார். சேலம் புதுக்கோட்டை போன்ற இடங்களில் உள்ள 'ஸ்கந்தாஸ்ரமம்' அமைத்துப் பக்தர்களின் குறைகளைத் தீர்த்தார்.

ஒருமுறை சுவாமிகள் நாகப்பட்டினம் சென்றிருந்தார். சுவாமிகளைத் தரிசித்துத் திருநீறு பெறுவதற்காகப் பெரும் கூட்டம் கூடியிருந்தது. அப்போது ஒரு சிறுவன் திருநீறு வாங்குவதற்காக நீட்டிய கையைத் தொட்டதும் சுவாமிகள் மகிழ்ச்சியுடன் "நீ யோகக்காரனப்பா! உன் பேச்சைக் கேட்கப் பணத்தைக் கொட்டிக் கொடுப்பார்கள்.

அதனைக் கொண்டு ஏராளமானஆலயங்களுக்குத் திருப்பணிகள் செய்யும் யோகமும் உனக்கு இருக்கிறது" என்று கூறி ஆசிர்வதித்தார். அந்தச் சிறுவன்தான் பின் னாளில் திருமுருகக் கிருபானந்தவாரியார் சுவாமிகள் எனப் புகழ் பெற்றார். சுவாமிகள் கூறியபடி சுமார் நாற்பது திருத்தலங்களுக்குத் திருப்பணிகளும் செய்தார்.

மதுரை வடக்கு மாசி வீதியில் உள்ள இருளப்ப கோனாருக்கு ஜாதகம் பார்த்ததில் இளமையில் ஆயுள் முடிந்து விடும் என்று கூறி காசி ராமேஸ்வரம் சென்று வந்தால் ஆயுள் விருத்தியாகும் என ஜாதகம் ரீதியாக தெரிந்து கொண்டனர்.

பெற்றோரை விட்டு காசி ராமேஸ்வரம் செல்ல முடியாமல் மதுரை கோரிப்பளையம் வரும் மாயாண்டி சுவாமியை சந்திக்க மக்களோடு மக்களாக இருக்கிறார். அப்போது மாயாண்டி சுவாமி தனது சூட்டுகோலால் கையை நீட்டி, "இருளப்ப கோனார் இங்கே வா, என்ன அப்பு ஆயுள் விருத்தி பண்ணனுமா? உன் குடும்பம் விருத்தி ஆக வேண் டுமா?" என கூறிய உடன், தன்னைபற்றி முன்பின் எதுவும் தெரியாமல் அழைத்த மாயாண்டி சுவாமியின் மகிமையை பார்த்து பக்தியுடன் அவரை வணங்கி சுவாமியுடன்





கட்டிகுளம் கருப்பனேந்தல் மடம் வந்து சேர்கின்றனர்.


பின்பு மடத்தில் நாற்பத்து எட்டு நாட்கள் அன்ன ஆகாரமின்றி தவ சாலையில் மாயாண்டி சுவாமி தியானம் செய்தார். நாற்பத்து எட்டு நாட்களுக்கு பின்பு, இருளப்ப கோனாரைப் பார்த்து “உன் கட்டைக்கு அழிவு இல்லை உன் குடும்பம் விருத்தியாகும்“ எனக் கூறி தன் உள்ளங்கையில் காசி விஸ்வநாதரையும் ராமேஸ் வரம் ராமநாதசுவாமியை காண்பித்து போய் வா என்கிறார்.

அதன் பின் தன் ஜீவ ஒடுக்கமான கட்டிகுளம் கருப்பனேந்தல் மடம் தவச் சாலைக்கு வரு வோருக்கு காசி ராமேஸ்வரம் சென்று வந்த புண்ணியம் கிடைக்கும் என்று பக்தர்களால் நம்பப்படுகிறது.

இது பற்றி மடத்தில் அன்னதானம் சேவைகளை செய்யும் பக்தர் கட்டிகுளத்தை சேர்ந்த சேகர் கூறியதாவது:–

கட்டிகுளம் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர் ஏராளமான ஆன்மீக அற்புதங்களை நிகழ்த்தி உள்ளார். இங்கு இப்போதும் பசி என்று வருவோருக்கு அன்னதானமும் ஆண்டு தோரும் ஆடி மாதத்தில் அவதார விழாவும் நடை பெறுகிறது.

இப்போதும் ஏராளமான வீடுகளில் சித்தர் அனுமதியுடன் வரையப்பட்ட திருஉருவ படத் தின் முன்பு வேண்டுபவருக்கு பல்வேறு ஆன் மீக அதிசயங்களை நிகழ்த்தி வருகிறார். மாயாண்டி சுவாமியின் முதல் ஜீவ ஒடுக்கம் தான்பிறந்த கட்டிகுளம் கருப்பனேந்தல் மடமும் திருப்பரங்குன்றம், திருகூடல் மலை நவ திருப்பதியில் ஒன்றான ஆழ்வார்



திருநகரி, மன் னார்குடி மற்றும் பர்மா ஆகிய இடங்களிள் ஜீவ ஒடுக்கமானார்.

அவர் கையினால் செய்த பள்ளிகொண்ட பெருமாள் கருப்பனேந்தல் மடத்தில் இன்றும் உள்ளது பக்தர்களின் மன குறையை முன்பே அறிந்து தீர்க்கும் மாகா சக்தியாக சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர் உள்ளார் என அவர் தெரிவித்தார்.





# 24 மணி நேரம் அன்னதானம் நடைபெறும் பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள வேதியரேந்தல் விலக்கில் பஞ்சபூதேஸ்வரம் என்னும் இடத்தில் உள்ளது, ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி திருக்கோவில்.

இது முழுவதும் கருங்கல்லால் அமைக்கப்பட்டது. இந்த கோவில் கோபுரம் தமிழக சிற்ப கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். இந்த கோவிலில் ஒவ்வொரு மாதம் அமாவாசை தினத்தில் உலக மக்கள் நலமாக வாழவேண்டி ப்ரத்யங்கிரா யாகமும், பவுர்ணமி தோறும் திருவிளக்கு பூஜையும் நடைபெறும். கோவிலில் மற்றொரு சிறப்பம்சமான 24 மணி நேரமும் நடைபெறும் அன்னதானத்தில் கலந்து கொள்ள பக்தர்கள்இரவு, பகலாக குவிகின்றனர்.

தினமும் காலை அன்னதானத்தில் சர்க்கரை பொங்கல், வெண் பொங்கல் அல்லது உப்புமா, கேசரி, வடை வழங்கப்படுகிறது. மதியம் 2 வகை காய்கறிகளுடன் சாம்பார், ரசம், மோர் உடன் நடந்து வருகிறது. சித்திரை தமிழ் வருட பிறப்பு, ஆடியில் சத சண்டி யாக பெரு விழாவில் மூன்று வேலையுமே சிறப்பு அன்ன விருந்து நவ ராத்திரி, தீபாவளி பண்டிகையில் அறு சுவை விருந்தும் தை பொங்கலுக்கு பக்தர்களுக்கு கரும்பும் வழங்கப்பட்டு வருகிறது. பக்தர்கள் பசியோடு இருக்ககூடாது. என்பதற்காக எப்போதும் அன்னதானம் நடைபெற்று வருகிறது. இதற்காக அன்னதான குழு ஏதும் கிடையாது. பக்தர்களே இங்கு நடைபெறும் அன்னதானங்களில் பங்கேற்று செல்லும் போது அன்னதானம் சப்ளை செய்யும் சேவையும் செய்கிற காட்சியை இங்கு காணலாம்.

யாகத்தில் பங்கேற்க ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு ஏதும் கிடையாது. அனைவரும் தரையில் உட்காந்து யாகத்தில் பங்கு பெறலாம். இங்கு நடைபெறும் 24 மணி நேர அன்னதானத்திற்காக தமிழகம் முழுவதிலும் உள்ள ஊர்களில் இருந்து வந்து அரிசி, காய்கறிகள் அன்ன தானத்திற்கு தேவையான அனைத்து பொருட்களையும் அனுப்பி வைக்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் நடைபெறும் ஸ்ரீ சத சண்டியாகம் பிரசித்தி பெற்றதாகும். இது பற்றி கோவிலில் உள்ள ஞானசேகர சுவாமிகள் கூறியதாவது தானத்தில் சிறந்தது அன்னதானம் ஆகும். வெளியூர்களில் இருந்து வருபவர்கள் பசியோடு சாமி கும்பிடக்கூடாது. பசியாறி சாமி கும்பிடும் போது வயிறு நிறைந்து மன நிறைவோடும் சாமி கும்பிட்டு செல்வார்கள். ஒவ்வொரு மாதம் நடைபெறும் அமாவாசை ப்ரத்யங்கிரா யாகத்தில் பங்கேற்று ஆனந்தமாய் வாழ வேண்டும் என கூறினார். இங்கு குண்டு முத்துமாரியம்மன், காசி அன்னபூரணி, சொர்ணஹாசரபைரவர், லெட்சுமி கணபதி மற்றும் பதினெட்டு சித்தர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட யாகசாலை மண்டபமும் உள்ளது.











# வரம் தரும் வைகைகரை அய்யனார் அற்புதங்கள் புரியும்

# அலங்காரகுளம் சோனையா கோவில்







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர்பகுதியில் தாயமங்கலம் ரோடு அலங்காரகுளத்தில் அருள் பாலிக்கும் வணங்கும் பக்தர்களுக்கு வரம்தரும் வைகைகரை அய்யனார் நம்பியவர்களுக்கு பல அற்புதங்கள் புரியும் அலங்காரகுளம் சோனையா சுவாமி கோவில் உள்ளது.

இக்கோவில் தற்போது திருப்பணிகள் முடிந்து கலை நயமிக்க சிற்பகலை அம்சத்துடன் அமைக்கப்பட்டு இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகம் முடிந்து பலமாதங்கள் ஆகிவிட்டாலும் அழகுமிகு சர்வ அலங்காரத்துடன் அய்யனார் ஸ்வாமி எழில் மிகு சோனையா சுவாமி மற்றும் பரிவார தெய்வங்களை தரிசிக்க மானாமதுரை மற்றும் வெளியூர்களில் இருந்து வந்து வழிபட்டு செல்கின்றனர்.

இக்கோவிலில் தேவியருடன் அய்யனார், தனிசன்னதியில் பிரம் மாண்டமான சோனையா, சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர், ஸ்ரீ லாடசன்னாசி, மற்றும் காளிஅம்மன், ராக்கச்சிஅம்மன், இதுதவிர விநாயகர், முருகன், நவகிரகங்களுக்கும்தனி சன்னதியில் அருள் பாலித்து வருகின்றனர்.

அலங்காரகுளம் தீர்த்தம்அழகர் மலையில் உற்பத்தி ஆகும்நூபுர கங்கைதீர்த்தம் சமமாகும். அலங்காரகுளம் தீர்த்தகரையில் அய்யனார் அருள்பாலிப்பதால் பக்தர்கள்மனமுருகி வேண்டும் வரங்கள் நிறைவேறுவதாக பக்த்தர்கள் தெரிவிக்கின்றனர்.

தாயமங்கலம் முத்துமாரியம்மனை தரிசிக்க செல்லும் ஏராளமான பக்தர்கள் தங்களது வாகனங்களை நிறுத்திவிட்டு வைகைகரை அய்யனார் சுவாமியையும், அலங்காரகுளம் சோனையாசுவாமியையும் வணங்கி வழிபட்டு செல்கின்றனர்.


மானாமதுரை நகர்பகுதியில் உள்ள இக்கோவிலில் தனிசன்னதியில் கட்டிக்குளம் தவதிரு சூட்டுகோல் மாயாண்டி சுவாமி அருள் ஆசிவழங்குகிறார்.






# சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் அவதரித்த பட்டமான் இல்லம்





தவ திரு கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் பிறந்த பட்டமான் இல்லம் தற்போது சித்தர் அவதரித்த திருக்கோவிலாக உள்ளது. கருப்பனேந்தல் மடத்தில் உள்ள சித்தரின் முதல் ஜீவ ஒடுக்கமான தவச்சாலையை தரிசனம் செய்வதற்கு முன்பு சித்தர் பிறந்த இடமான இக்கோவிலுக்கு வந்து ஏராளமான பக்தர்கள் வழிபடுகின்றனர்.

இங்கு சித்தர்களின் திரு உருவ சிலைகள், ஓவியங்கள் கலைநய மிகத்துடன் தத்துரூபமாக உள்ளது சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் காசி யாத்திரை சென்ற அரிய ஓவியமும் உள்ளது இங்கு சித்தரின் அவதார நட்சத்திரமான பூராடம், அமாவாசை, பவுர்ணமி தினங்களில் சிறப்பு வழிபாடு பூஜையும் நடைபெற்று வருகிறது.



கருப்பனேந்தல் மடத்தில் சுவாமி தவக்கோலத்தில் இருந்த போது கட்டிக்குளத்தை சேர்ந்த ஓவியர் சித்தரின் அருளும் அனுமதியும் பெற்று வரைந்த ஓவியம் பல நூறு ஆண்டுகளாக இங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

சித்தரால் உருவாக்கப்பட்ட நவநீத பெருமாளும் தவச்சாலைக்குள் உள்ளது சித்தர் பிறந்த இந்த இடமான இக்கோவில் கருப்பனேந்தல் மடம் செல்லும் வழியில் உள்ளது




ஆன்மிக புகழ்மிக்க கட்டிக்குளம் ஊராட்சியில் நடைபெறும்
சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 165வது அவதார விழாவிற்கு
வருகை தரும் பக்தக் கோடி பெருமக்களை வரவேற்கிறோம்

A.கண்ணன்
பில்டிங் காண்ட்ரக்டர்
மதுரை
செல்:9443772849

T.புகழேந்தி
வீரா டிராவல்ஸ்
மதுரை
செல்:7373744677

A.R.முல்லைமுத்து
RV.Aqua Ro System, Sales & Service
செல்:8940800906

54/49,
பாரதி தெரு,
சிவகங்கை-630 561

aanmeegamalar.com

## நீதி வழங்கும்


# கட்டிக்குளம் சூட்டுக்கோல் ராமலிங்கசுவாமி கோவில்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டாரத்தில் மிக பெரிய ஊராட்சி கட்டிக்குளம் ஆகும். கட்டிக்குளம் நாடு என்று அழைக்கப்படும் இவ்வூரில் நீதி வழங்கும் சூட்டுக்கோல் ராமலிங்கசுவாமி திருக்கோவில் உள்ளது இங்கு நடைபெறும் பங்குனி உத்திர திருவிழா பிரசித்தி பெற்றது. இக்கோவிலில் குடி கொண்டு இருக்கும் சூட்டுக் கோல் ராமலிங்கசுவாமிகள் நீதி காக்கும் சித்தர் ஆவார்.

தென் பொதிகை பகுதியில் இருந்து யோக நெரியில் பல சாதனை செய்து யாத்திரை வரும் வழியில் கட்டிக்குளம் பகுதிக்கு வந்தபோது. அங்கு இளைஞர்களுடன் கிட்டி விளையாடி கொண்டிருந்த போது விளையாடிகொண்டிருந்த இளைஞர்களுக்கு தண்ணீர் தாகம் ஏற்பட்டது அப்போது இளைஞர்களின் தாகத்தை தீர்க்க சூட்டுக்கோல் ராமலிங்க சித்தர் தன் காலால் தரையை அழுத்தி நீருற்று வர செய்து தன்னுடன் விளையாடிய இளைஞர்களுக்கு தண்ணீர் தாகத்தை போக்கினார். பின்னர் ஒரே மரத்தில் வேம்பு, வீலி, வியா, அரசு, சங்கு ஆகிய ஐந்து கிளைகளாக தனது தவ வலிமையால் உருவாக்கி பின் அங்கேயே விநா யகர் வழிபாடு செய்தார். தற்போது அந்த இடத்தில் தான் எழில் மிகு ராஜ கோபுரத்துடன் பக்தர்கள் கோவில் கட்டி உள்ளனர்.

ஐந்து கிளைகள் உடைய அதிசய மரத்தை இவர் தவ வலிமையால் உருவாக்கியதால் சூட்டுக்கோல் ராமலிங்கசுவாமி சித்தரை ஐந்து மரத்தையா என்று பக்தர்கள் இன்றும் அழைக்கின்றனர். அதேபோல் கட்டிக்குளத்தில் பிறந்த சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் ராமலிங்கசுவாமி சித்தரை குரு நாதராக ஏற்று சேவைகளையும் பூஜைகளையும் செய்து உள்ளார். தனது இறுதி காலத்தில் மதுரையில் உள்ள தனது சீடர் இருளப்ப கோனாருக்கு கையிலே காசி, ராமேஸ்வரத்தை காண்பித்து ராமலிங்க சுவாமி கோவில் அருகே உள்ள கருப்பனேந்தல் மடத்தில் இருந்த தவ சாலைக்குள் சென்றார்.

இதுவே சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் முதல் ஜீவ ஒடுக்கமாக பக்தர்களால் இப்போதும் வணங்கப்பட்டு வருகிறது. கட்டிக்குளத்தில் கோவில் கொண்டுள்ள சூட்டுக்கோல் ராமலிங்கசுவாமிகள் தீராத நோய்களை தீர்ப்பார் குழந்தை வரம் மற்றும் பக்தர்கள் மனம் உருகி வேண்டும் வேண்டுதல்களை நிறைவேற்றுவார் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது சித்தர் ராமலிங்கசுவாமிகள் கோவில் முன் புறத்தில் ஆறு கால் மண்டபம் உள்ளது இங்கு தான் பழங்காலம் தொட்டே பஞ்சாயத்துகள் நடைபெறுகிறது நீதி தவறி தீர்ப்பு அளிப்பவர்களுக்கும், பொய் யான குற்றசாற்றுகளை கூறு பவர்களுக்கும் ராம லிங்கசுவாமிகளின் தண்டனைக்குஆளாக நேரிடும் என்று அஞ்சு வார்கள் அதனால் தான் நீதி வழங்கும் ராமலிங்கசுவாமி எனவும் பக்தர்களால்







அழைக்கப்படுகிறது சில ஆண்டுகளுக்கு முன்பு கோவிலில் வண்ணம் தீட்டும் பணிக்கு வெளி ஊரை சேர்ந்த தொழிலாளி மது அருந்திவிட்டு பணி செய்த போது திடீர் என்று கன்னத்தில் பலார் என்று அரை விழுந்த நிகழ்ச்சியும் இங்கு நடந்தது தங்கள் வேண்டுதல் நிறைவேறியதுடன் பங்குனி உத்திர நாளில் பக்தர்கள் பய பக்தியுடன் பால் குடம் காவடி, இளநீர் காவடி என நேர்த்திக்கடன் செலுத்துவார்கள் பால் குடம் எடுக்கும் பக்தர்களுக்கும் பால் தரும் மாட்டுக்காரருக்கும் ராமலிங்கசுவாமிகள் கனவில் தொன்றுகிறார் என்று பக்தர்களால் நம்பப்படுகிறது மேலும் அன்று கோவில் அபிஷேகத்திற்க்கு தவிர மற்ற உபயோகத்திற்க்கு பால் கறக்க போனால் பசு மாடு உதைப்பதாகவும் தனது கன்றையும் பால் குடிக்கவிடாமல் தடுப்பதாக பக்தர்களால் கூறப்படுகிறது .இங்கு நடைபெறும் கிராம கூட்டங்களில் ராமலிங்கசுவாமி வழங்கும் தண்டனைகளுக்கு பயந்து முறையான தீர்ப்புகளை இன்றும் வழங்கி வருகிறார்கள். ஆகவே நீதி காக்கும் சூட்டுக்கோல் ராமலிங்கசுவாமி கோவிலில் தினமும் ஏராளமான பக்தர்கள் தங்களது நியாமான கோரிக்கைகளை வேண்டி வழிபட்டு செல்கின்றனர். சூட்டுக்கோல் ராமலிங்கசுவாமி சித்தர் ஜீவ சமாதி தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடியில் உள்ளது. சூட்டுகோல்ராமலிங்கம் சுவாமிக்கு மிகபெரிய கோவிலாக கட்டிகுளத்தில் மட்டுமே உள்ளது. இங்கு விநாயகர் ,சிவபெருமான் நந்தி, முருகன் மற்றும் நவகிரகங்கள் சன்னதி மற்றும் தர்மசக்கரம் கோவில் மேல் தளத்தில் 12ராசிகளின் கட்டமும் உள்ளது.




# தெய்வீக ஆற்றல் கிடைக்கும் கருப்பனேந்தல் மடம்

கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தை சுற்றி ஏராளமான வயல் வெளிகளும் நீர்நிலைகள் உள்ளது.

கருஎன்றால் உயிர் ஏந்தல் என்றால் நீர்நிலைகள் உள்ள பகுதியாகும். ஆல், அரசு, வேம்பு, வில்வம், போன்ற உயிர் வளர்க்கும் மரங்களாகும். இந்த அணுக்கள் மூலமாக வித் திட்டு வாழ்ந்த மகான்கள் சூட்டுகோல் ராமலிங்க சுவாமி, சித்தர் செல்லப்பாசுவாமி, மகாசித்தர் மாயாண்டி சுவாமி, பிராமணத்திஅம்மாவும், சிலம்பு சுவாமி, பொன்னின் அம்மையார் போன்றவர்கள் வாழ்ந்த இடமாக கருப்பனேந்தல் மடம் இருந்து உள்ளது. நீரின்றியமையாது உலகம் என்பதற்கு ஏற்ப நீரநிலைகள் நிரைந்த இப்பகுதியில் மகான்கள் வாழ்ந்து பிராண உயிர் காற்றை மண்ணில் பரப்பிய இடமாகவும் ஞானபீடமாகவும் பக்த்தர்களின் மனகுறைகளை அறிந்து மகாசித்தர் சூட்டுகோல் மாயாண்டி சித்தர் தீர்பதாகவும் சுவாமியின் முதல் ஜீவ ஒடுக்கமாகவும் கருப்பனேந்தல் மடம் உள்ளது.






# மாங்கல்ய வரம் தரும் முனிவர்

உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவர் மாங்கல்ய முனிவர். இவரே அகத்தியர் – லோபமுத்ரா, வஷிஸ்டர் – அருந்ததி ஆகியோரின் திருமணங்களை நடத்தி வைத்தவர். இந்த முனிவரை வணங்கினால் பெண்களுக்கு மாங்கல்ய பலம் அதிகரிக்கும். இவர் திருச்சி மாவட்டம் லால்குடிக்கு அருகேயுள்ள இடையாற்று மங்கலம் மாங்கல்யேஸ்வரர் கோவிலில் அருள் பாலிக்கிறார்.

உத்திர நட்சத்திரத்தன்று அமிர்த யோகத்தில் மாங்கல்ய முனிவர் இத்தலத்திற்கு வருவதாக நம்பிக்கை. அப்போது மாங்கல்யேஸ்வரர் மற்றும் மங்களாம்பிகையை வணங்கும் மாங்கல்ய முனிவர், இதே நேரத்தில் இங்கு வரும் பெண்களுக்கு மாங்கல்ய பலம் அளிக்க வேண்டும் என வேண்டுவாராம். ஆனியில் வரும் உத்திரம் சிறப்புடையது. அது அமிர்த யோகத் துடன் கூடி வருவதால் இந்நந்நாளில் இடையாற்றுமங்கலம் மாங் கல்யேஸ்வரரை வணங்குவது மிகவும் சிறப்பாகும்.

# சித்தத்தை கடக்க பத்தாயிரம் ஜென்மம் கடக்கவேண்டும்

விழிப்பு என்பது மனதின் முதல் நிலை அடுத்த நிலை என்பது சித்தம், இது மனம் உறங்கும் பொழுது தான் விழித்தி கொள்ளும் இதில் தான் முன் ஜென்ம கர்மா செயல்கள், தெய்வங்களின் ஆசிகள், மந்திர உச்சாடன பதிவுகள் மற்றும் பஞ்சபூத கலவையில் ஆனா பூமியில் உள்ள ஆகர்ஷண சக்திகள் நிறைந்து நிற்கும்.

சித்தத்தில் மனம் ஒடுங்கும் பொழுது சக்திதேவியர்கள் வசப் படுவார்கள். இவர்களால் சித்து வேலைகளை செய்யமுடியும். இவர் களின் முதல் படிநிலைகளை மந்திரவாதிகள் என்று நூல்கள் சொல்கிறது.

இரண்டாவது நிலைக்கு இவர்கள் செல்லும் பொழுதும் காய சுத்தியும் காயசித்தியும் பெற்று சித்தத்தை கடந்தவர்காளாக உரு மாறுகிறார்கள். இவைகள் எல்லாம் ஒரு மனிதனுக்கு சாத்தியமாக பத்தாயிரம் ஜென்ம பிறப்புகள் வேண்டும் என காகபுஜண்டர் உரைக்கிறார்.





சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 165வது அவதார விழாவிற்கு வருகை தரும் பக்தக் கோடி பெருமக்களை வரவேற்கிறோம்

SUN PAPER STORE

Papers, Boards,
Wedding invitations

3490, West Mailn St,
Pudukkottai

944 300 47 33

mail: sunpaperstore@gmail.com



சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 165வது அவதார விழாவிற்கு வருகை தரும் பக்தக் கோடி பெருமக்களை வரவேற்கிறோம்



TSNO 2608

உரிமை
ரா.அண்ணாதுரை வாசுகி
எல்லைப்பட்டி

சீல் VLJ

ஸ்ரீ வேளார் ஜுவல்லரி A/C

தங்கம் வெள்ளி நகைகள்
வாங்க கைராசியான ஸ்தாபனம்

T.S.No: 2617, தெற்கு ராஜ வீதி, புதுக்கோட்டை.

97874 80127 • 63800 56355



சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள்
165வது அவதார விழாவிற்கு வருகை தரும்
பக்தக் கோடி பெருமக்களை வரவேற்கிறோம்

இறைபணியில்: VRKR.ஜெயபாஸ்கர்

செட்டிநாட்டு பொருள்கள்
(பாத்திரங்கள்) அனைத்தும்
கிடைக்கும்.

நாட்டுமருந்து வகைகள்

மளிகை, பூஜை பொருள்கள்,
செட்டிநாடு பலகாரம்,
ட்ரைபுரூட்ஸ்,

செட்டிநாட்டு பழைய பொருள்கள்
அனைத்தும் வாங்கப்படும்

ஜெயபாலாஜி
சூப்பர் மார்க்கெட்

C.கிருஷ்ணன் வீரம்மாள்
அரிமழத்தார் கடை,
4167, கீழராஜவீதி,
புதுக்கோட்டை

செல்: 9566396765

aanmeegamalar.com

# தேவரின் பிறப்பை முன்கூட்டியே கணித்த சித்தர்

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் பிறப்பை கூறிய சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தை சேர்ந்த உக்கிர பாண்டி தேவருக்கும் இந்திராணி அம்மையாருக்கும் நீண்ட நாட்களாக குழந்தை இல்லை தம்பதிகள் இருவரும் மாரநாடு கருப்பன சாமி கோவிலில் மாசி களரி விழாவிற்கு சென்று சாமி தரிசனம் செய்துவிட்டு கருப்பனேந்தல் மடம் வழியாக வில் வண்டியில் வந்து கொண்டு இருந்தனர்.

அப்போது தம்பதிகள் இருவரும் கருப்பனேந்தல் மடத்தில் தியானத்தில் இருந்த சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமியை தரிசிக்கின்றனர்.

அப்போது கண் விழித்த சுவாமிகள் அவர்களை பார்த்த உடன் 56 ஊர்களுக்கு சொந்தகாரர்கள் நீங்கள் இந்த சாதாரணமான வரை தேடி வந்து இருக்கிறீர்கள் என்று சொன்னவுடன் தம்பதிகள் இருவரும் எங்களுக்கு பிள்ளை வரம் வேண்டும் என கேட்டனர் சற்று நேரம் கண் மூடி தவ நிலையில் இருந்த சுவாமிகள் புன்னகையுடன் கண் திறந்து உங்களுக்கு ஊர் போற்றும் பிள்ளைதான் வேண்டுமா எனக் கேட்டார்.

அவர்கள் இருவரும் எங்களுக்கு ஊர் போற்றும் பிள்ளை தான் வேண்டும் என்ற தெரிவித்த உடன் அவர்ளை பார்த்து தேவரே உங்களின் மனைவியின் வயிற்றில் ஒரு முத்து இருக்கிறது அது அடுத்த வருடம் குழந்தையாக பிறக்க போகிறது அந்த முத்து ஊர் அல்ல உலகம் போற்றும். அதனால் அந்த குழந்தைக்கு என் ஆதி குரு நாதர் ஞான சித்தர் ராமலிங்கம் பெயரையும் சேர்த்து வையுங்கள் என கூறி ஆசி வழங்கினார்.



மாயாண்டி சுவாமிகள் கூறிய படியே அடுத்த ஆண்டே ஆண் குழந்தை பிறந்தது அக்குழந்தைக்கு சுவாமி கூறிய படியே முத்துராமலிங்கம் என பெயரிட்டு மகிழ்ந்தனர்.

அந்த குழந்தை தான் தேசியத்தையும்,தெய் வீகத்தையும் தனது இரு கண்களாக கொண்ட இந்தியா வில் புகழ்பெற்ற பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஆவார்.




# தீராத நோய்களை குணமாக்கும் பனையப்பட்டி ஞானி புல்லான் சாது சித்தர்



புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே உள்ள பனையப்பட்டி என்ற ஊரில் அவதரித்து ஏராளமான மக்களுக்கு அவர்களின் மனக்குறையை தீர்த்தும் பொதுமக்களுக்கு ஏற்பட்ட தீராத நோய்களையும் தனது சித்த வைத்தியத்தாலும் தவ வலிமையாலும் குணப்படுத்தி வந்தார்.

அங்குள்ள ஆயிரம் பிள்ளையார் கோவிலில் பூஜை செய்து பக்தர்களின் குறைகளை போக்கியதை அறிந்து ஏராளமானோர் பக்தர்கள் அவரை சந்தித்து ஆசி பெற்று வந்தனர் ஞானி புல்லான் சாது சித்தர் ஆயிரம் பிள்ளையார் கோவிலில் தவ அறை அமைத்து இரவு பகலாக தவம் இருந்து வந்தார்.

ஞானி புல்லான் சாது சித்தர் சித்த வைத்தியத்தை கைவந்த கலையாக உடற்கூறை அறிந்து மூலிகைகளை கொண்டும் தவம், யோகசனம் மூலமும் குணப்படுத்தி மக்களிடம் எந்த வித காணிக்கைகளும் இன்றி மக்களின் நோய்களை தீர்த்து வந்து மக்களின் அன்பிற்கு பாத்திரமானார். தவம் தரும் ஞானி புல்லான் சாதுவிற்கு ஜீவ ஒடுக்கம் மற்றும் பிராண பிரதிஷ்டை கடந்த 2012 ம் ஆண்டு அமைக்கப்பட்டது.

இவர் பூஜை செய்த ஆயிரம் பிள்ளையார் கோவிலுக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு கும்பாபிஷேகம் நடைபெற்றது ஞானி புல்லான் சாதுவிற்க்கு மாதந்தோரும் சிறப்பு யாகமும், பவுர்ணமி பூஜை வழிபாடும் அன்னதானமும் நடைபெற்று வருகிறது இப்போதும் ஞானி புல்லான் சாது சித்தர் ஜீவ ஒடுக்கத்தை தரிசனம் செய்ய ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். தங்களுக்கும் தங்களை சார்ந்தவருக்கும் ஏற்பட்ட நோய்களை குணமாக்க வேண்டியும் மனம் உருகி வேண்டிச் சென்று நோய்கள் குணமான உடன் ஞானி புல்லான் சாது ஜீவ ஒடுக்கத்திற்கு வருகை தந்து நன்றியுடன் ஏராளமான பக்தர்கள் வழிபட்டு வருவதை பனையப்பட்டியில் இப்போதும் காணலாம்.

ஞானி புல்லான் சாது சித்தர் வழிபாடு பற்றி தெரிந்து கொள்வதற்கு 9787521727 இந்த நம்பருக்கு பக்தர்கள் தொடர்பு கொள்ளலாம்.






சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 165வது அவதார விழாவிற்கு வருகை தரும் பக்தக் கோடி பெருமக்களை வரவேற்கிறோம்

இறை பணியில்

ஆ.ரா.காளிமுத்து பாண்டியம்மாள்

மேலவீட்டார் கட்டிக்குளம்

# நின்ற கோலத்தில் அருள்புரியும்
# தாயமங்கலம் முத்துமாரிஅம்மன்

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங்குடி வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

சிவகங்கை மாவட்டம் இளையான் குடியில் இருந்து 11 கிமீ தொலைவிலும், மானாமதுரையில் இருந்து 30 கிமீ தொலைவிலும், சிவகங்கையில் இருந்து 32 கிமீ தொலைவிலும், காளை யார்கோவிலில் இருந்து 18 கிமீ தொலைவிலும், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில்இருந்து 22 கிமீ தொலைவிலும், மதுரையில் இருந்து 88 கிமீ தொலைவிலும் உள்ளது தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில்.

இத்திருக்கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார். இத்தலத்து அம்மன் சிறுமி வடிவத்தில் வணங்கப் பட்டு வருகிறார். இக்கோவிலில் வருடா வருடம் தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெறும்.

இந்த 10 நாட்கள் கொண்ட திருவிழாவில் தேரோட்டம் மிகவும் சிறப்பான வைபவம் ஆகும்.இத் திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உரு வாக்கி 1914ல் கட்டப்பட்டுள்ளது.

இந்த கோவிலில் முத்துமாரியம்மன் வீற்றிருக்க, அருகே விநாயகர், முருகன் மற்றும் சோனையா உள்ளிட்ட இஷ்ட தெய்வங் கள் காட்சியளிக்கின்றனர். இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இத் திருக்கோவில் உள்ளது.

கன்னித் தெய்வமாக இருந்து சுற்று வட் டாரத்தில் 22 கிராம மக்களுக்கும், தாயாகவும், மாங்கல்ய பாக்கியம் எனும் மங்கல வரம் அருளும் நாயகியாகவும் இருந்து அம்மன் அருள்பாலிக்கும் ஊர் என்பதால், 'தாய்மங்கலம்' என இவ்வூர் அழைக்கப்பட்டதாம். அதுவே, பின்னர் தாய மங்கலமாக மருவியது என்கிறார்கள்.

கன்னித் தெய்வமாய் கோயில் கொண்டிருக் கிறாள், ஸ்ரீமுத்துமாரியம்மன். இத்தெய்வம் கன்னித்தெய்வமாக இருப்பதால் திருமண வரம் வேண்டுவோர், தாலிப்பொட்டினை அம்மன் காலடி யில் சமர்ப்பித்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இத்தலத்து வரலாற்றுப்படி, பன்னெடுங்காலம் முன், ராமநாதபுரத்தைச் சேர்ந்த வணிகர்கள், தங்கள் பகுதியில் விளையும் பொருட்களை விற் பனை செய்வதற்காக, அடிக்கடி மதுரைக்குச் சென்று வருவது வழக்கம். அவர்களில் ஒருவர், மீனாட்சியம்மன் மீது அதீத பக்தி கொண்டவர். அவருக்கு நெடு நாட்களாக குழந்தை இல்லை. ஒவ்வொருமுறையும் மதுரைக்கு வியாபார நிமித்தமாக செல்லும் அவ்வியாபாரி, தவறாமல் மீனாட்சியம்மையையும், சொக்கநாதரையும் வழி பட்டு, தனது உள்ளக் குமுறலைக் கொட்டி தீர்த்துவிட்டு வருவார்.



அப்படி ஒருநாள், மதுரையில் இருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்தார் வியாபாரி. வழியில், சிறுமி ஒருத்தி பாதை தெரியாமல் அழுது கொண்டிருந்ததை கண்டார். அந்தச் சிறுமியை விசாரித்தபோது, தனது பெயர் முத்துமாரி என்றும், தனது தாய் தந்தையிடமிருந்து பிரிந்து விட்டேன் என்றும் எங்கு போவதென வழிதெரிய வில்லை என்றும் கூறி தேம்பினாள்.

"கவலைப்படாதே அம்மா! உன்னை நான் பத்திரமாகப் பார்த்துக்கொள்கின் றேன்'' எனக் கூறி அந்தச் சிறுமியை தன்னுடன் அழைத் துப் போனார். மதுரை மீனாட்சியே இந்தக்குழந் தையை தனக்குத் தந்ததாக எண்ணினார்.ஆனால், அவரது சந்தோஷம் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

அவர்கள் சென்ற வழியில் ஆறு ஒன்றுகுறுக் கிட்டது. பயணக்களைப்பாக இருந்ததால், சிறுமி யை கரையில் உட்கார வைத்துவிட்டு ஆற்றில் இறங்கி குளிக்கப் போனார். ஆனால், குளித்து முடித்துவிட்டு கரைக்கு வந்து பார்த்தால், குழந் தையைக் காணவில்லை. இதனால் ரொம்பவே மனம் வெறுத்துப்போன அந்த வணிகர் தன் மனைவியிடம் நடந்ததையெல்லாம் கூறிவருந்தி னார். இரவு உணவைகூட சாப்பிடாமல், படுக்கப் போனவர் அப்படியே கண்ணயர்ந்து விட்டார்.

அவரது கனவில், 'சிறுமியாக வந்தது நான்தான் என்றும் ஊருக்கு அருகாமை யிலிருக்கும் கள்ளிக்காட்டில், நான்உறைய இருக்கிறேன் என்றும் கோயில் கட்டி வழிபடுபவர்களுக்கு, வேண்டும் வரங்களை அருளுவேன் என்றும் கூறி மறைந்தாள் முத்துமாரி. படுக்கையில் இருந்துஎழுந்த வியாபாரி, தன் மனைவியிடம் எல்லாவற்றையும் கூறினார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் முதல் வேலை யாக ஆற்று மணலில் அம்மன் சிலையை அமைத்து வழிபடத்தொடங்கினார். இவரைத் தொடர்ந்து ஊர் மக்களும் வழிபட்டனர். நாளடை வில் அந்தப் பகுதி மக்களின் கண்கண்ட தெய்வமானாள் முத்து மாரியம்மன்.

அம்மை நோயினால் பாதிக்கப் பட்டவர்கள், செவ்வாய் வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் கோயிலுக்கு






வந்து வணங்கி இங்கிருந்து தீர்த்தம் பெற்றுச்சென்றால் நோய் குணமாகும் என்பது இங்குள்ளமக்களின் நம்பிக்கையாக இருக்கிறது. இதுதவிர திருமண வரம், குழந்தை பாக்கியம் வேண்டியும் ஏராளமான பக்தர்கள் வருவதையும், பிரார்த் தனை நிறைவேறி நேர்த் திக்கடன் செலுத்து பவர்களையும் இங்கு காண லாம். மாவிளக்கு எடுத்தல், கரும்பு தொட்டிலில் குழந்தையை சுமந்து வருதல், கண்மலர் காணிக்கையாக்குதல் என பல்வேறு நேர்த்தி கடன்களை பயபக்தியுடன் செய்வர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாவிளக்கு எடுத்தும் தீச்சட்டி, பால்காவடி, சிலா குத்தல், வேல், அலகு குத்துதல், கரும்புத் தொட்டில், ஆயிரம் கண் பானை எடுத்தும் அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். விழா காலங் களைத் தவிர மற்ற நாட்களில் தினசரி பூஜைகள், அன்னதானம் நடைபெறுகிறது.

கண் நோய் உள்ளவர்களுக்கு இங்கு அம்மன் சன்னதியில் அபிஷேக தீர்த்தம் கொடுக் கின்றனர். கண்பிரச்சினை தீர்ந்தவுடன் கண்மலர் செலுத்தியோ அல்லது அங் கப்பிரதட்சனை செய்தோ தங்களின் நேர்த்திக்கடனை செலுத்து கின்றனர்.

திருவிழாவை தொடர்ந்து பக்தர்கள் வசதிக் காக, மதுரை, கமுதி, காளையார்கோவில், பார்த்தி பனூர், இளையான்குடி, அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்து சிறப்பு பேருந்து தாயமங்க லத்திற்கு இயக்கப்பட்டு வருகிறது.

aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com





## கட்டிக்குளம் தவத்திரு சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 165-ம் ஆண்டு அவதார விழா அழைப்பிதழ்



**மங்களகரமான காளயுக்தி வருடம் ஆடிமாதம் 1858ஆம் ஆண்டு பூர்வஜென்மத்தை முன்னிட்டு நிகழும் சுபகிருது வருடம் ஆடிமாதம் 26ம் தேதி 11.08.2022 வியாழக்கிழமை காலை 7.31 மணிக்குமேல் 10.15 மணிக்குள் கட்டிக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள அவதார இல்லத்தில் பூர்ணஹூதி பூஜை, அபிஷேக ஆராதனைகளும், அன்னதானமும் சிறப்பாக நடைபெறும். அன்றைய தினம் இரவு 8.00 மணிக்கு பூப்பல்லக்கில் கட்டிக்குளம் ஸ்ரீ சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் திருவுருவம் வீதிஉலா நடைபெறும். ஆன்மிகப் பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமியின் திருவருள் பெற வேண்டுகிறோம்.**

**மா.க.கு.பரமசிவம் சிவாச்சாரியார்,**
கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் அவதார இல்லம் பரம்பரை தர்மகர்த்தா.

**கட்டிக்குளம் பட்டமாள்**
(4வது தலைமுறை) செல் 8940754066,

**K.சேகர், M.A.,**
கைங்கரிய தொண்டர் 9976519601

**M.தண்டாயுதபாணி M.A.B.L,** அட்வகேட் கட்டிக்குளம்
கருப்பனேந்தல் மடம், தவச்சாலை, சூட்டுக்கேல் மாயாண்டி சுவாமிகள் முதலாவது ஜீவ ஒடுக்கமான இடம்.

**பரம்பரை தர்மகர்த்தா**
(3வது தலைமுறை) கட்டிக்குளம் (இ) மதுரை 8122141659

அழைப்பிதழ் உபயம்

**கட்டிக்குளம் மாயாண்டி சுவாமிகள் தொண்டர் குழு,** கட்டிக்குளம்

சமையல் அமைப்பு: மாஸ்டர் **K.முருகன்** விட்டங்குளம்
ஒலி ஒளி அமைப்பு: **K.பாலகிருஷ்ணன்**
உரிமையாளர் நியூ ராஜேஸ் ஆடியோஸ், கட்டிக்குளம்

**கிராம பொதுமக்கள்,**
கட்டிக்குளம்



# கட்டிக்குளம் ஊராட்சி

## மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்



**ஆன்மிக புகழ்மிக்க கட்டிக்குளம் ஊராட்சியில் நடைபெறும் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 165வது அவதார விழாவிற்கு வருகை தரும் பக்தக் கோடி பெருமக்களை வரவேற்கிறோம்**

- நிலத்தடி நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து வருவதால் குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துவோம்.
- பொது குடிநீர் விநியோக அமைப்பில் முறைகேடாக குடிநீர் எடுப்பதை தடுப்போம்.
- மழைநீரை நிலத்தடிக்குள் செல்லவிடாமல் தடுக்கும் பிளாஸ்டிக் பயன்பாட்டை முற்றிலும் தவிர்ப்போம்.
- டெங்கு காய்ச்சலை உருவாக்கும் கொசுக்களை உருவாகாமல் தடுக்க சுற்றுப்புறத்தை சுகாதாரமாக பராமரிப்போம்.

**மாவட்ட ஆட்சியர், சிவகங்கை**

**உதவி இயக்குநர்**
ஊராட்சிகள், **சிவகங்கை**

**திட்ட இயக்குநர்/இணை இயக்குநர்**
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, **சிவகங்கை**



**டி.எம்.ரஜினிதேவி**
வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ),
மானாமதுரை

**சங்கரபரமேஸ்வரி**
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)

**மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்**
மானாமதுரை



திருமதி **த.சாந்தி தமிழ்நேசன்**
ஊராட்சி மன்றதலைவர், கட்டிக்குளம்

திரு **இ.தமிழ்நேசன்**
ஊராட்சி மன்ற துணைத்தலைவர்

**வார்டு உறுப்பினர்கள்**
1. R.சகுந்தலா தேவி, 2. M.பூமிராஜன் 3. V.மாணிக்கசெல்வம், 4. P.ராமகிருஷ்ணன், 5. M.பவித்ரா

ஊராட்சி செயலர்
**கண்ணன்** (பொறுப்பு)

aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.

# கும்பாபிஷேகத்திற்கு காசி நீரைத் தரும் குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவில்





சிவவழிபாடுகளில் முக்கியமாக பிரதோஷ வழிபாடு உள்ளது. பிரதோஷம் நேரமான மாலை வேளையில் நந்தி பகவானுக்கும் சிவனுக்கும் ஒரேநேரத்தில் அபிஷேக வழிபாடு நடைபெறும்.

இந்த நேரத்தில் பக்த்தர்கள் நந்தி பகவானுக்கு வைக்கப் படும் வேண்டுதல்களை சிவபெருமான் தீர்த்து வைக்கிறார் என பக்த்தர்களால் நம்பபட்டு வருகிறது.

ஞாயிறு முதல் சனி வரை ஒவ்வொரு கிழமைகளில் வரும் பிரதோஷம் பலவிதமான நன்மைகளை தருகிறது.

இந்த ஆண்டு தொடக்கத்திலேயே ஜனவரி 15ந் தேதியும் 29ந் தேதியும் தை மாதத்தில் இரண்டு சனிமகா பிரதோஷ தினங்கள் வருகிறது. சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பரமக்குடி

சாலையில் உள்ள குறிச்சி வழிவிடு பெரியநாச்சிஅம்மன் கோவில் வளாகத்தில் காசியில்இருந்து பூஜித்து காசிவிஸ்வ நாதர், காசி நந்தி மற்றும் காசிதுர்க்கை காசிகுருபகாவன் போன்ற சன்னதிகள் காசில் எப்படி உள்ளதோ அதேபோல் இங்கு அமைக்கப்பட்டு உள்ளது. பக்தர்கள் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் இங்கு வழங்க படும் கங்கைதீர்த்தால் அபிஷேகம் செய்து சிவபெருமானை தொட்டு வழிபட்டு செல்லலாம்.

ஆண்டு தோறும் காசி கங்கை கரையில் முன்னோர் தர்பணம் திதி போன்றவை குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவிலில் தை, ஆடி புரட்டாசி அமாவாசை தினங்களில் இங்கு நடைபெறுகிறது.

கோவில் கும்பாபிஷேகத்திற்கும் கங்கை தீர்த்தம் இலவசமாக வழங்கபட்டு வருகிறது. கோவில் பற்றியும், கும்பாபிஷேகத்திற்கு கங்கை நீர் தேவைப்படுபவர்களும் மேலும் விபரங்கள் அறிய கீழ்கண்ட எண்ணில் தொடர்பு கொள்ளளாம் போன்: 9444159653.




சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள்
165வது அவதார விழாவிற்கு வருகை தரும்
பக்தக் கோடி பெருமக்களை வரவேற்கிறோம்

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



இறைபணியில்
கோ.கார்த்திகேயன்
(Ex Army)
LIC முகவர், தலைவர் மன்ற உறுப்பினர்,

ரியல் எஸ்டேட்
ஸ்ரீ மருதுடைய அய்யனார் லாரி சர்வீஸ்
சீனிமடை – மானாமதுரை
செல் 9842681739

# வடக்கு முகமாக அருள் பாலிக்கும் பிள்ளையார் பட்டி விநாயகர்




6 அடி உயர கம்பீரமாக அமர்ந்த கோலத்தின் மூர்த்திதான் – பிள்ளை யார்பட்டி விநாயகர்.

இது ஒரு குடவரைக் கோவில். வலம் புரிவிநாயகர் – சதுர்த்தி விரதம் மேற்க் கொண்டு நிறைவேற்றினால் நலம் பெறலாம்.

பிரதி ஜனவரி முதல் தேதி ஆயிரக் கணக்கான பக்தர்கள் விநாயகரை தரிசிப்பது வழக்கம். தமிழகத் திலேயே உண்டியல் இல்லாத கோயில் இதுதான். ஆண்டு தோறும் விநாயகர் சதுர்த்தி அன்று மஹா கொழுக்கட்டை செய்யப் படுகிறது.

பிள்ளையார்பட்டியின் பிரதானப் பெயர் மருதம்பூர். இங்கு மூலவராக கற்பக விநாயகர் அருள் தருகிறார்.

இக்கோவில் சுமார் 1600 ஆண்டுகளுக்கு முன்பே அமைக்கபட்டு உள்ளது. குடைவரைக் கோவிலில் புகழ் பெற்ற பல்லவ மன்னர்களுக்கு முன்பே பாண்டியர்களால் அமைக்கபட்ட கோவில் கி.பி. 12ம் நூற்றாண்டின் முற்பகுதியில் செட்டிநாட்டவர் வசமானது. இன்று வரை நாட்டுக்கோட்டை நகரத் தார்களின் மேற்பார்வையில் கோவில் வழிபாடு நடந்து வருகிறது.

கயமுகா சூரனை கொன்ற பிள்ளையார் தனது பழியை போக்கிக் கொள்ள சிவபெருமானை நோக்கி தவம் செய்த இடம் பிள்ளையார் பட்டியாகும். இங்கு சிவ பெருமானை நோக்கி தவம் செய்த வண்ணம், வடக்கு முக மாகவே பக்தர்களுக்கு விநாயகர் அருள் பாலிக்கிறார்.

கற்பக விநாயகர் தனது வலது கையில் ஒரு சிவலிங்க சின்னமும், இடது கரத்தை தனது வயிற்றை சுற்றியுள்ள கச்சையின் மீதும் வைத்துக் கொண்டும் அமர்ந்து இருக்கிறார். இவரது தும்பிக்கை வழஞ்சுழியாக இருக்கிறது. மற்றொரு சிறப்பு அம்சம் இவருக்கு முப்பரிநூல் கிடையாது.

விநாயகர் சன்னதிக்கு எதிர்புறம் அமைந்துள்ள வடக்கு கோபுரவாசல் வழியாக சென்று வழிபட்ட பின்பு கிழக்கு கோபுரவாசல் வழியாக வரவேண்டும் என்பது மரபு.

விநாயகர் கோபுரத்துக்கு எதிர்புறத்தில் வெளிபிரகாரத்தின் வட திசையில் விசாலமான திருக்குளம் உள்ளது. ஒவ்வொரு சதுர்த்தியின் இரவு நேரத்தில் விநாயகர் மூசிக வாகனத்தில் எழுந்தருளி கோவில் உட்பிரகாரத்தில் வலம் வருவார்.

பிள்ளையார்பட்டியில் விநாயகர் சதுர்த்தியை ஒட்டி பத்து நாள் திருவிழா நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் தேர்திருவிழா புகழ் பெற்றது. இங்கு பிள்ளையாருக்கு தனியே தேர் உள்ளது. பிள்ளையார் தேரில் இரு வடங்களில் ஒன்றை ஆண்களும், மற்றொன்றை பெண்களும் இழுத்துச் செல்வார்கள்.

நடைதிறப்பு : காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை. தைபூச தினத்தில் மட்டும் காலை 6.00 மணிமுதல் பகல் 12.00 மணி வரை, மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை.

திருவிழாக்கள்

விநாயகர் சதுர்த்தி திருவிழா ஆவணி மாதம் 10 நாட்கள். ஒன்பது நாட்கள் முன்பாக காப்புக்கட்டி கொடி ஏற்றம் செய்து திருநாள் தொடங்கும். சதுர்த்தி அன்று இரவு விநாயகப் பெருமான் வெள்ளி மூஷிக வாகனத்தில் எழுந்தருளுவது விசேஷம். மிக விமர்சையாக நடக்கும்

# சகலசவுபாக்கியம் தரும் சதாசிவ பிரம்மேந்திராள்





மானாமதுரையில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆண், பெண் உருவில் உள்ள ஸ்ரீ சதா சிவ பிரமேந்திராள் சன்னதி தற்போது புதிதாக முழுவதும் கருங்கற்களினால் கட்டப்பட்டு உள்ளது. மானச சஞ்சரே என்று பாடிய ஸ்ரீ சதா சிவ பிரம்மேந்திராள் என்ற மகான் ஒரே நேரத்தில் மானாமதுரை ஆனந்தவல்லி சோமநாதர் திருக்கோவில், ஓம்கார், வாரணாசி ஆகிய இடங்களில் மட்டும் ஓர் ஜோதி வடிவில் ஆனந்தவல்லி சோமநாதருடன் காட்சி அளித்ததாக கூறப்படுகிறது.

அவருடைய பூத உடல் ஜீவ சமாதி நெடூரில் உள்ளது. இங்குள்ள ஸ்ரீ சதா சிவ பிரம்மேந்திராள் ஜோதி ரூபத்தில் காட்சி அளித்த இடத்தில் பீடம் கோவில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் முன்பு மனமுருகி வழிபடுபவர்களுக்கு மன நிம்மதி கிடைப்பதோடு தீராத நோய்களும் நீங்குவதாகவும் நம்பப்படுகிறது.

ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் மூன்று நாட்கள் இந்தியாவில் உள்ள அனைத்து இசை கலைஞர்களும் இசை ஆராதனை விழா நடத்துகின்றனர். புதிதாக இசை கற்பவர்கள் இங்கு வந்து வழிபட்டால் இசை பயிற்சியில் கலந்து கொண்டு ஏராளமானோர் புகழ் அடைந்து உள்ளனர். உலகம் முழுவதிலும் உள்ள கர்நாடக இசை வித்வான்கள் இதில் கலந்து கொண்டு இசை ஆராதனை விழா மானாமதுரை ஆனந்தவல்லி சோமநாதர் திருக்கோவிலில் நடைபெறுவது தனி சிறப்பாக உள்ளது.


கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 165வது அவதார விழாவிற்கு வருகை தரும் பக்தக் கோடி பெருமக்களை வரவேற்கிறோம்

Bharatgas
Bharat Petroleum
COOK FOOD. SERVE LOVE

எங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் திருப்புவனத்தை சுற்றியுள்ள 95 கிராம பொதுமக்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

அருண் ஏஜன்ஸீஸ்
பாரத் கேஸ் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்

MAK LUBRICANTS
டீலர் : MAK லூப்ரிகேண்ட்ஸ் சிவகங்கை மாவட்டம்.
Emergency No : 9443274648

1/86A, பூவந்தி மெயின் ரோடு, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம்.
போன் : 04574-264300, 265710

குறிப்பு : எங்களின் கிளை நிறுவனமாக செயல்படும் வாட்டர் சர்வீஸில், லிப்ட் வசதியில் டூவீலர், கார், காலை முதல் மாலை வரை சிறப்பாக வாட்டர் சர்வீஸ் செய்யப்படும்.

aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com

# சித்த பூமியாக திருவண்ணாமலை விளங்குவதன் மர்மம்



திருவண்ணாமலை மலை ஒரு பிரமாண்டமான பிரபஞ்ச ரகசியம். அதாவது, பிரபஞ்சம் தோன்றிய காலத்தில் இருந்தே இந்த மலை இருப்பதாகப் புராணங்கள் சொல்கின்றன.

சுமார் 260 கோடி வருடப் பழைமை வாய்ந்தது என்கிறார்கள் ஆய்வாளர்கள். மலையே சிவம். அதாவது சிவலிங்கம். அந்த மலையைச் சுற்றி, அதாவது மலைலிங்கத்தைச் சுற்றி, 108 சிவலிங்கங்கள் புதைந்திருப்பதாகச் சொல்கின்றனர்.

இந்த மலையையும் மலையைச் சுற்றிப் புதைந்திருக்கும் 108 சிவலிங்கங்களையும் சுற்றித்தான் நாம் தற்காலத்தில் கிரிவலம் வந்து கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு சிவலிங்கமும் கண்ணுக்கு தெரியாத தெய்வீக அலைகளை மலை முழுவதும் பரப்பி வருகின்றன.

இதனால் மாதந்தோறும் பௌர்ணமி நன்னாளிலும் தமிழ் மாதத்தின் பிறப்பான முதல் நாளிலும்,ஒவ்வொரு பிரதோஷ நாளிலும், சித்த புருஷர்களும் ஞானிகளும் யோகிகளும், சூட்சும ரூபமாக இன்றைக்கும் கிரிவலம் வந்து, ஈசனை வணங்கி வழிபடுகிறார்கள் என்பதாக ஐதீகம்!

திருவண்ணாமலை எனும் புண்ணிய க்ஷேத்திரம், நம்மைப் போன்ற பக்தர்களுக்கு ஒரு திருத்தலம். ஆனால் அது சித்தர்களுக்கு புனித பூமி.

எத்தனையோ சித்தர்கள், இங்கு வந்திருக்கிறார்கள். வந்து தவமிருந்திருக்கிறார்கள். திரும்ப மனமில்லாமலேயே இங்கேயே தங்கி, ஜீவ சமாதியாகி இன்னும் தவத்தில் மூழ்கியிருக்கிறார்கள்.

இன்றைக்கும் சூட்சும ரூபமாய் இருந்து, தவத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதாக ஐதீகம்!

நம் மன அதிர்வுகளை புத்தி தன் கட்டுபாட்டுக்குள் கொண்டு வராமல் எத்தகைய சித்துக்களையும் செய்ய இயலாது. இயல்பாகவே புவியியல் அமைப்பிலேயே எண்ணங்களை நம் கட்டுக்குள் கொண்டு வரக்கூடிய அதிர்வுகளை கொண்டு திருவண்ணாமலையானது அமைந்துள்ளது.

நம் மனதில் கோபம், ஆக்ரோஷம், குழப்பம்,கவலை ஆகியவை எழும் போது நம் உடலை சுற்றி உள்ள அலைகள் 14 ஹெர்ட்ஸ்க்கு மேல் இருக்கும். இதனை பீட்டா அலைகள் என கூறுகின்றனர். இந்நிலையில் மனம் நம் கட்டுப்பாட்டில் இருக்காது. நம் ஓய்வெடுக்கும் போது (ஆழ்ந்த தூக் கத்தின் போது) உடலை சுற்றி உள்ள அலைகள் 14 ஹெர்ட் ஸ்க்கு கீழே இருக்கும். அந்த அலைகளை ஆல்ஃபா அலைகள் என கூறுகின்றனர்.

முயற்சி செய்தால் நம் எண்ணங்களை நம் கட்டுக்குள் கொண்டு வரலாம். அதே உடல் தியான நிலையில் இருக்கும் போது எட்டு ஹெர்ட்ஸ்க்கு கீழே இருக்கும்.அதை தீட்டா அலைகள் என்கிறனர் விஞ்ஞானிகள்.

நம் எண்ணங்களை நம் இயக்கங்களை எளிதாக நம் கட்டுக்குள் கொண்டு வரலாம். இதற்காகவேஉலகெங்கிலும் உள்ள சித்தர்கள் இங்கே தேடி வருகின்றனர். திருவண்ணா மலையானது இயல்பாகவே "தீட்டா" அதிர்வுகளை கொண்டு உள்ளது.

இதனால் தவ நிலையில் உள்ள சித்தர்களின் உடலில்




இருந்து இந்த அலைகள் வெளிப்பட்டு கொண்டே இருக்கும். இதற்காகவே இங்கே சித்தர்கள் சமாதி அடைந்திருக்கிறார்கள். சித்தர்களின் பூமியாக திருவண்ணாமலை விளங்கும் மர்மம் இதுதான்.

இறைவன் எங்கு குடியிருக்கிறானோ அங்குதான் சித்தர்களும் குடியிருப்பார்கள். சித்தர்களுக்கு எல்லாம் தலயாயச் சித்தர் ஆதி சித்தர் சிவபெருமான்தான். தலைவர் இருக்கும் இடத்தில்தானே தொண்டர்களும் குடியிருப்பார்கள்?

அதனால் தான் திருவண்ணாமலையில் சிவ பெருமானுக்கு உறுதுணையாக, காலம் காலமாக நாம் பெரிதும் போற்றும் பதினெட்டு சித்தர்களும்,அவர்களுக்கு பக்கபலமாக 188 சித்தர்களும் இன்றும் அரூபமாக நடமாடி கொண்டு இருக்கிறார்கள். கைலாய மலையில் கூட காண கிடைக்காத அதிசயம் இது.

அத்திரி மகரிஷி,மச்ச முனிவர், கோரக்கர், கிராம தேவர், துர்வாசர், சட்டை முனிவர், அகத்தியர்,போகர், காக புசுண்டர், உரோமேச சித்தர்,யூகி முனிவர், சுந்தரானந்தர், அழகனந்தா, பிரம்ம முனி, காலங்கி நாதர், நந்தி தேவர், தன்வந்திரி, குரு ராஜரிஷி,கொங்கனர், உதயகிரிச் சித்தர், பிகுஞ்சக ரிஷி, மேக சஞ்சார ரிஷி, தத்துவ ஞான சித்தர், காளமீகா ரிஷி, விடன முனிவர், யாகோபு முனி வர், அமுத மகாரிஷி, சூதமா முனிவர், சிவத்தியான முனிவர், பூபால முனிவர், முத்து வீரமா ரிஷி, ஜெயமுனி, சிறு வீரமா முனி, வேதமுனி, சங்கமுனி, காசிபமுனி, பதஞ்சலி முனி, வியாகிரம மகாரிஷி, ஜனகமா முனி, சிவப்பிரம்ம முனி, பராச முனி, வல்ல சித்தர், அஸ்வணி தேவர், குதம்பைச் சித்தர், புண்ணாக்கு சித்தர், யோகச்சித்தர், கஞ்சமலைச் சித்தர், திருமூலநாதர், மவுனச்சித்தர், தேகசித்திக் சித்தர், வரரிஷி, கவு பாலச்சித்தர், மதிராஜ ரிஷி, கவுதமர், தேரையர், விசுவனித் தேவர், அம்பிக்கானந்தர், டமாரானந்தர், கையாட்டிச்சித்தர், கண்ணானந்த சித்தானந்தர், சச்சிதானந்தர், கணநாதர், சிவானந்தர், சூரியானந்தர், சோகுபானந்தர், தட்சிணா மூர்த்தி, ரமநாதர் மதி சீல மகாமுனி, பெரு அகத்தியன், கம்பளி நாதர், புலஸ்தியர், திரி காலாக்கயான முனி, அருட் சித்தர், கவுன குளிகைச்சித்தர், ராஜரிஷி வசந்தமாமுனி, போதமுனி, காங்கேய ரிஷி, கான்சன முனி, நீயான சமாதிச்சித்தர், சாந்த மஹா ரிஷி, வாசியோகச்சித்தர், வாத சாந்த மகாரிஷி, காலாட்டிச்சித்தர், சத்தரிஷி, தேவ மகரிஷி, பற்ப மகாரிஷி, நவநாதச்சித்தர், அடவிச்சித்தர், நாதந்தச்சித்தர், ஜோதிரிஷி, பிரம்மானந்த ரிஷி, அநுமாதிச்சித்தர், ஜெகராஜ ரிஷி, நாமுனிச்சித்தர், வாசுதேவ மகாரிஷி, பாலையானந்தர், தொழுகன்னிச்சித்தர்.



என இருநூற்றுக்கும் அதிகமான சித்தர்கள் திருவண்ணா மலையில் அண்ணாமலையாரை தரிசித்ததாகவும், சுமார் 25க்கும் அதிகமான சித்தர்கள் ஜீவசமாதி ஆனதாக அகத்தியர் தான் இயற்றிய ஜீவநாடியில் எடுத்துரைத்துள்ளார்.




# ஆன்மிக உதிரிப்பூக்கள்

- உலகின் முதல் தோன்றிய சிவாலயம் ராமநாதபுரம் மாவட்டம் உத்திரகேசமங்கை யில் மங்களநாதராக ஈசன் உள்ளார். ஆருத்ரா தரிதசனத்தின் போது மரகதபச்சை நடராஜரின் திருமுகம் பூசப்பட்ட சந்தனம் கலையபடும் அன்று லட்சக்கணக்காண பக்தர்கள் தரிசித்து செல்கின்றனர்.
- மனிதஅவதாரம் எடுத்து வனவாசம் செய்து ராவணணை வதம் செய்து வெற்றி பெற்று ராமபிரான் சீதை, லட்சுமணன் அனுமன் ஆகியோர் சிவபூஜைசெய்து வழிபாடுகள் செய்தனர்.
- ராமர் பிரதிஷ்டை செய்து வணங்கிய தால் ராமநாத சுவாமி என திருபெயரில் ராமேசுவரத்தில் உள்ளது.
- சிவ பக்தர் சிவபக்தியுடன் காசியில் இருந்து சிவலிங்கத்துடன் யாத்தி ரையாக வந்த போது ஓய்வு எடுத்து சிவலிங்கம் எடுக்க முயன்றபோது இங்கே தொடர்ந்து பூஜை செய்ய சிவன் உத்தரவு வந்ததால் இன்று சிவகங்கையில் காசி விஸ்வநாதர் திருகோவில் உள்ளது.
- காசியில் இருந்துவந்ததால் சிவகங்கை எனவும் இங்கு கங்கையா மிகபெரிய தெப்பம் உள்ளது. நதி ஏதும் கிடை யாது.
- சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வைகை கரையில் உள்ள சோமநாதர் கோவிலில் தல விருஷ்சமாக சிவனின் அம்சமாக அதிக அளவில் வில்வ மரங்கள் உள்ளது.வில்வ வனம் சேத்திரம் எனவும் அழைக்கப்படுகிறது.
- மானாச சஞ்சரரே என பாடிய சதாசிவபிரம்மேந்திரால் ஜீவசமாதி அடைந்த இடமாக மானாமதுரை ஆனந்த வல்லி சோமநாதர் திருக்கோவில் உள்ளது. சந்திர பகவான்சாபம்நீங்கி சிவபூஜைசெய்ததலம் ஆகும்.
- தென்மாவட்டங்களில் சிவனை கங்கை நீரால் பக்த்தர்களே அபிசேகம் செய்து தொட்டு வழிபடும் காசி சிவன்கோவில் மானாமதுரை பரமக்குடி சாலையில் உள்ளது.
- அஸ்திபூவாகமாறிய இடமாக திருப்புவனம் உள்ளது.இங்குபுஸ்பணே ஸ்வரர்எனதிருப்பெயரில் உள்ளது. மதுரை ராமேசுவரம் சாலையில் திருப்பூவனம்உள்ளது.
- திருவிளையாடல் புராணத்தில் கருங்குருவிக்கு சிவன் மோட்சம் அளித்த தலமாக மதுரை ராமேசுவம் சாலையில் மேலெபெருங்கரை எனும் இடத்தில் அட்டாள சொக்கநாதர் என்ற சுயம்பு லிங்க வடிவில் கோவில் உள்ளது.
- மதுரையில் முக்தி கிடைக்கும் கோவிலாக தெப்பகுளம் முன்பு முக்தீஸ்வரர் சிவலாயம் உள்ளது.
- மலையே சிவணாக திருவண்ணாமலை உள்ளது. மலை சுற்றி அஷ்ட லிங்கத் களுக்கும் கோவில் இங்கு மட்டுமே உள்ளது.
- உலகிலேயே அதிகளவில் சிவாலயங்கள் தமிழகத்தில் மட்டுமே உள்ளது.
- குற்றாலத்தில் மட்டும் சிவனுக்கு வெண்ணீர் அபிஷேகம் செய்யப்பட்டு வருகிறது.

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்: 9994162192





140 க்கும் மேற்பட்ட இதழ்களையும் மாதம் இரண்டு முறை வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"த்தையும் aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்





ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



## கட்டிக்குளம் ஸ்ரீலஸ்ரீ சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் அவதார விழாவிற்கு வரும் பக்தர்களே வருக வருக சித்தர் அருள் பெறுக

**Er.V.அழகுராஜா**
உரிமையாளர்
A&S பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸ்சன்
சிங்கம்புணரி (கி) வையாபுரி
செல் 9150253174

S.கருணாநிதி
P.தென்னவன்
K.இளையராஜா
M.மலைச்சாமி
M.ராஜா, சிங்கம்புணரி

**த.ரெத்தினம்** M.A.PGDCM
த/பெ.தடியப்பன் சிங்கம்புனரி

**ஆ.மனோகரன்**
த/பெ ஆறுமுகம்
கீர்த்தி பில்டர்ஸ் சிங்கம்புணரி

**A.சண்முகமணி PVN**
சிங்கம்புணரி

**V.சரவணன்**
அருணாச்சலா மில்க் பாய்ன்ட்


**சிங்கம்புணரி சிவகங்கை மாவட்டம்**

aanmeegamalar.com

# பஞ்சம் போக்கி மக்களின் இடர்தீர்த்த
# இடைக்காடர் சித்தர் கோவில்

பதினெட்டு சித்தர்களில் ஒருவரான மகான் இடைக்காடர் சித்தர் 32 அறப்பணிகள் செய்து பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி சிவனை வழிபட்டு திருவண்ணாமலையில் ஜோதியாக மறைந்து திருவண்ணாமலை வரும் சிவ பக்தர்களுக்கு இன்றும் அருள் ஆசி வழங்குகிறார். இடைக்காடர் சித்தர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே ராமேசுவரம் நெடுஞ்சாலையில் வைகை ஆற்றங்கரையில் உள்ளது இடைக்காட்டூர். இங்கு 2ஆம் நூற்றாண்டில் இடைக்காடர் தங்கி வாழ்ந்துள்ளார்.



அந்த சமயம், நவக்கிரகங்களின் தாக்கத்தின் காரண மாக தொடர்ந்து 12 வருடங்கள் பூலோகம் கடும் பஞ்சத்தில் இருக்கும் என்பதை அறிந்த இடைக்காடார், அந்த பஞ்சகாலத்தில் எப்படி வாழ்வது என்பதை முன்கூட்டியே சிந்திதார். இந்தக் காலகதியை வெல்ல ஒரு வழியையும் கண்டறிந்து வைத்திருந்தார்.

தன் குடிசையைப் புதுப்பிக்கும் போது, மண் சுவரோடு நெல்லைக் கலந்துவிட்டார். வீட்டைச் சுற்றிலும் நீரில்லா விட்டாலும் வளரும் எருக்கஞ் செடிகளைப் பயிரிட்டு அதை ஆடுகளுக்குத் தின்னக் கொடுத்துப் பழக்கிவிட்டார்.

இதனால், வறட்சி வந்து பூமண்டலமே கதறிய போதும் இடைக்காடரோ அவரது ஆடுகளோ துன்புறவில்லை. எருக்கந்தழையைத் தின்னும் ஆடுகளுக்கு நமைச்சல் ஏற்படும். உடனே மண்குடிசை சுவரில் சென்று உரசும். மண்ணோடு கலந்திருந்த நெல் இதனால் உமி நீங்கி அரிசியாகக் கீழ் விழும்.

இடைக்காடர் போகியல்ல, யோகி. அவருக்கு ஒரு கைப்பிடி அரிசி ஒருநாளைக்குப் போதும். அதைக் கொண்டு கஞ்சிகாய்ச்சிக் குடித்தார். ஆடுகளும் அவரும் அந்த வறண்ட காலத்திலும் அழகாக தப்பிக் கொண்டே இருந்தனர்.

நவக்கிரகங்கள் கொடுத்த தாக்கத்தில் பூமியே திண்டாடும் போது, இடைக்காடாரும், அவரின் ஆடுகளும், எந்த பஞ்சமும் இன்றி வாழ்ந்ததை அறிந்த நவகிரகங்கள், இதற்கான காரணத்தை அறிய முற்பட்டது.

மாற்று உருவம் ஏ ற் ப டு த் தி நவக்கிரகங்கள் இடைக்காடா ரின் குடிசைக்குள் நுழைந்தனர். வந்திருப்பவை கோள்கள் தான் என்பதைத் தனது சித்தஞானத்தால் உணர்ந்து கொண்டார் இடைக்கடார்.

விருந்தாளிகளுக்கு உணவு படைப்பதுமரபு என்பதற்கினங்க உணவு தயாரிப்பு பணியை துவங்கினார், மாறுவேடத்தில் வந்த நவ கிரகங்கள் நடப்பவற்றை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தது.

முதல் காரியமாக ஆடுகளுக்கு எருக்கிலையை தின்னக் கொடுத்தார். இலையை உண்ட ஆடுகள் அரிப்பெடுத்து சுவர்களில் உரச, நெல்லின் கூடுகள் உடைபட்டு உமியும் அரிசியும் பிரிந்து விழுந்தன. அதை எடுத்து கஞ்சி காய்ச்சியவர், நவகிரகங்களுக்கு அதை வழங்கினார்.

அவர் செயலைப் பார்த்து கோள்கள் சற்று கூசிப் போயின. வறுமை, இல்லாமை போன்ற நிலையிலும் இடைக்காடரின் விருந்தோம்பும் பண்பு, அவர்கள் மனதில் அவர்பால் இருந்த எதிர்மறையான எண்ணங்களை அப்படியே மறையச் செய்தது.

உணவை உண்ட நவகிரகங்கள் உண்ட களைப்பில் ஓய்வெடுக்க ஆரம்பித்தனர். நவகிரகங்கள் அனை வரும் ஒரே திசையில் இருந்தால் எப்போதும் பஞ்சம் நிலவிவிடும் என இடைக்காடர் சித்தர் நவகிரகங்களை திசைதிருப்பி வைத்தார்.

அவர்கள் கண்விழித்தபோது பெரிய அளவில் மழை பெய்து இடைக்காட்டூர் மலையாற்றில் வெள் ளம் புரண்டு கொண்டிருந்தது.

விழித்தெழுந்த கிரகங்கள், முன்பு அமர்ந்திருந்த நிலையில் தங்களில் சிலர் இடம் மாறி புதிய திசை நோக்கி அமர்ந்திருப்பதைக் கண்டனர். அதிர்ச்சியும் ஆச்சரியமுமாய் இடைக்காடரைப் பார்த்து நின்றனர்.

இடைக்காடர்சிரித்தார்.

"என்னை அறிய வந்தவர்கள் நீங்கள், நானோ, உங்களை முன்பே அறிந்தவன், எங்களை விடவா நீ பெரியவன் என்பது உங்கள் எண்ணம். என்னை விட எல்லாமே பெரியது என்பதே என் எண்ணம். அதனாலேயே உலகம் உவந்து வாழ உங்களில் சிலரின்





நிலைப்பாட்டை அதாவது சஞ்சாரத்தை மாற்றியமைத்தேன்.

பிறர் வாழ நினைக்கும் சன்யாசிகள் மனது வைத்தால் அவர்கள் வாழும் நாட்களை மட்டுமல்ல, கோள் களையும் மாற்றும் வல்லமை அவர்களுக்கு உண்டு என்பதை, இதோ கொட்டும் மழையைக் கொண்டு உலகுக்கு உணர்த்தி விட்டேன். கோள்களால், கர்ம வினைகளுக்கு உட்பட்ட வர்களையே ஆட்டிப்படைக்க முடியும். அதை வென்று வாழ முற்படுபவர்களை ஒன்றும் செய்ய இயலாது என்பதை, இனிவரும் காலம் உணரட்டும்." என்று கூறினார்.

இடைக்காடாரின் செயலைப் பார்த்து நவகிரகங்களும், பஞ்சம் ஏற்படுத்தி மக்களை வதைத்ததை எண்ணி வருந்தி, இடைக்காடாருக்கு ஆசி வழங்கிச் சென்றனர்.

இன்றைக்கும் இடைக்காடர் சித்தர் எழுதிய பஞ்சாங்கம் நாடு முழுவதும் பார்க்கப்படுகிறது. பல்வேறு தோஷ நிவர்த்தி தலமாக இந்த இடைக்காடர் சித்தர் கோவில் உள்ளது.

இங்கு இடைக்காடருக்கு ஐம்பொன் சிலையும் இது தவிர விநாயகர், முருகன், நவகிரகங்கள் சன்னதியும் உள்ளது. இங்கு ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் திருவாதிரை நட்சத் திரத்தில் இடைக்காடர் ஜெயந்தி விழாவும் குருபெயர்ச்சி, சனிபெயர்ச்சி, ராகு கேது பெயர்ச்சி விழாவும் நடக்கிறது.

பௌர்ணமி அன்று விஷேச பூஜை வழிபாடும் நடை பெறுகிறது. அனைத்து தோஷம் நீங்க இடைக்காடர் சித்தர் நவகிரக கோவில் உள்ளது. இடைக்காடர் சித்தரால் திசை மாறிவைத்து பிரதிஷ்டை செய்யப்பட்ட நவகிரகங்களை ஏராளமானோர் வழிபட்டு செல்கின்றனர்.

இடைக்காடர் சித்தரால் நவகிரகங்கள் அமிர்தம் பெற்ற பூலோக அமிர்தலோகமாக இடைக்காட்டூர் உள்ளது. இந்தியாவிலேயே நவகிரகங் களுக்கும் தனிக்கோவிலாக இடைக்காட்டூர் சித்தர் கோவில் உள்ளது.

சிறிய கோவிலாக உள்ள இடைக்காடர் சித்தர் கோவிலை ராஜ கோபுரம், மகாமண்டபம், அன்னதான கூடம், தியான மண்டபம் மற்றும் தங்கும் வசதி சுகாதார வசதிகளை தமிழக இந்து சமய அறநிலைத்துறை செய்துதர வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மதுரை ராமேசுவரம் நான்கு வழி சாலையில் மதுரையில் இருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் கோவில் அமைந்துள்ளது. மதுரை மத்திய பேருந்து நிலையத்தில் இருந்தும், முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் இருந்தும் இடைக்காட்டுருக்கு அரசு பஸ் வசதி உள்ளது.


இடை காடார் சித்தர் பௌர்ணமி அன்னதான குழு இடைக்காட்டூர்



நவகிரகங்களைதிசை மாற்றி வைத்த நவகிரக நாயகன் மகான் இடை காடார் சித்தர் ஆலயத்தில் ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் காலை 10 மணிக்கு உலக மக்கள் யாவரும் நலமாக வாழ ஹோம பூஜை யும் அதனை தொடர்ந்து அபிஷேகம் மற்றும் அன்னதானமும் சிறப்பாக நடைபெறும், பக்தர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு நவகிரக தோசம் திரு மணதடை கல்வி குழந்தை யின்மை ஆகிய பிரச்சனைகளுக்கு தீர்வுகாண அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

பௌர்ணமி விழாவில் நீங்களும் பங்கேற்க 97515559851 /9751936853

– இப்படிக்கு

இடை காடார் சித்தர் பௌர்ணமி அன்னதான குழு இடைக்காட்டூர்



சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 165வது அவதார விழாவிற்கு வருகை தரும் பக்தக் கோடி பெருமக்களை வரவேற்கிறோம்



PROFESSIONAL PAINTERS

M.KARTHIK RAJA



6374527012
9786655454

Idaikattur, sivagangai

- Housing painting
- Stencil Work
- Artist Work
- Temple Works
- Polish Work
- Texture Design
- Butty Work
- Interior & Exterior
- Wall Design
- Special Finishing

aanmeegamalar.com



# நோய்களை குணமாக்கும் மானாமதுரை ஆனந்தவல்லி சோமநாதர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வைகை ஆற்றுக்கரையில் அற்புதங்கள் நிறைந்த ஸ்ரீஆனந்த வல்லிசோமநாத சுவாமி திருக்கோயில் உள்ளது இக் கோவில் ஆதி காலத்தில் வில்வ வனகாட்டில் இருந்ததால் வில்வ வன ஷேத்திரம் என்று அழைக்கப்பட்டு வந்து உள்ளது சந்திர பகவான் தனக்கு தட்சண் இட்ட சாபத்தால் தொழுநோய் ஏற்பட்டு அது நீங்க கோவில் முன் உள்ள சந்திர புன்கரணி தீர்த்தத்தால் நீராடி வில்வ வனகாட்டில் இருந்த அம்மனையும் சிவபெருமானை வணங்கி தொழுநோய் நீங்கியதாகவும் நோய்கள் தீர்ந்து ஆனந்தம் அடைந்ததால் ஆனந்த வல்லியாகவும் சோமநாதராகவும் ஒரு மண்டலம் வணங்கி ஆனந்தம் அடைந்தான் என கூறப்படுகிறது.



பெருங்குளமாக இருந்த புஷ்கரணி தற்போது ஒரு சிறிய கிணறாக உள்ளது. மதுரை மீனாட்சி அம்மன் ஆட்சி காலத்தில் பின் வைகை ஆறு இங்கு வந்துள்ளது அதேபோல் மலிக் காபூர் படையெடுப்பின் போது நாயக்க வம்சத்தால் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரை இங்கு உள்ள வனகாட்டில் மறைத்து வைத்து பாதுகாத்து பின் மதுரை சென்றதாகவும் கூறப்படுகிறது.

ராமயன காலத்தில் ராமர் தனது வானர படைகளுடன் இங்கு தங்கி ஆனந்தவல்லி அம்மனையும் சுயம்பு லிங்கமாக உள்ள சோமநாதரை தரிசித்து ராவணனை வென்றதாகவும் கூறப்படுகிறது. மானசசஞ்சரே என்று பாடிய ஸ்ரீசதாசிவ பிரம் மேந்திராள் ஒரே நேரத்தில் மானா மதுரை ஆனந்தவல்லி அம்மன் கோவில் கரூர் மாவட்டம் நெரூர் மற்றும் ஓம்கார் காசி கராச்சி ஆகிய இடங்களில் ஓர் ஜோதி வடிவில் ஜீவசமாதி அடைந்ததாக கூறப்படுகிறது .

இங்கு உள்ள ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் சன்னதி முன்பு

மனம் முருகி வேண்டும் போது தீராத நோய்களும் நீங்குவதாக நம்பப்படுகிறது.

மானாமதுரையில் ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் இந்தியாவின் உள்ள அனைத்து இசை கலைஞர்களும் மூன்று நாள் இங்கு தங்கி ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் இசை ஆராதனை நடத்தி வழிப்பாட்டடும் செல்கின்றனர்.

மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய சிறப்புகளுடன் துன்பம் நீங்கி நோய்கள் போக்கி ஆனந்த தலமாகவும் இம்மை பயன எிக்கும் மோகன சுந்தர தலமாகவும் உள்ளது.



பாஞ்சால மன்னர்ஸ்துல கர்ணன் வில்வக் காட்டை அழித்து பட்டணம் உருவாக்கி வெள்ளை நிறத்தோடு கூடிய சுயம்பு மூர்த்தியாம் சிவலிங்கத்தை வணங்கி ஆலயம் கட்டிய தாக கூறப்படுகிறது. ஆனந்தவல்லி அம்மன் கோபுரம் முன்பு நின்ற நிலையில் உள்ள விநாயகர் தனி சன்னதியும் சூரியன் சந்திரன் கால பைரவர் வள்ளி தெய்வானை சுப்பிரமணிய சுவாமி சன்னதிகளும் உள்ளது வில்வகாட்டில் இருந்ததால் தல விருட்ச மரம் வில்வத்துடன் கூடிய சிவ தலமாக உள்ளது.

ஆண்டு தோறும்மதுரை மீனாட்சி அம்மன் திருக் கோயில் எப்படி திருவிழா நடைபெறுகிறதோ அதேபோல் இங்கு சித்திரை திருவிழா ஆடித்தபசு நவராத்திரி சதாசிவபேந்திராள் இசை ஆராதனை போன்ற விழாக் கள் நடைபெறுகிறது.

மதுரை மீனாட்சி சுந்த ரேஸ்வரரை பாதுகாத்த வில்வ காடாகவும் தொழுநோய் பாதிக்கப்பட்ட சந்திரபகவான் குணமடைந்தாலும் அகத்தியர் மாணிக்கவாசகர்போன்றோர் வணங்கி ஆனந்தம் அடைந் தாலும் வானர படைகளுக்கு பசி நீங்கியதாலும் ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் ஜுவசமாதி அடைந்து முக்தி பெற்றாலும் அற்புதங்கள் நிறைந்த கோவிலாக ஆனந்தவல்லி சோமநாதசுவாமி திருக்கோயில் உள்ளது. மதுரை இராமேஸ்வரம் செல்லும் சுற்றுலா பயணிகள் தினமும் இங்கு வந்து வழிபட்டு செல் கின்றனர் மதுரையில் இருந்து இராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மானாமதுரை ஆனந்தவள்ளி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.




# முப்பழ பூஜை ஏற்று முழங்கால் வலியை தீர்க்கும் முருகன்



ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியிலிருந்து சுமார் 22கி.மீ தொலைவில் உள்ளது மேலக்கொடுமலூர். முருகப் பெருமான்.

சூர சம்ஹாரத்துக்குப் புறப்பட்ட போது, அன்னை சக்தி யிடமிருந்து வேல் மற்றும் பல ஆயுதங்களைப் பெற்றுச் சென்றார். அவற்றுள் பிரதானமான `மழு' எனும் ஆயுதத்தை முருகப் பெருமான் பெற்ற தலம் தான் கொடுமழுவூர் என்றழைக்கப்படும் மேலக்கொடுமலூர்.

அசுரர்களை அழித்துவிட்டுத் திரும்பிய முருகப் பெருமான், மாலை வேளையில் இத்தலத்தை அடைந்தார். அங்கே தவமியற்றிக்கொண்டிருந்த முனிவர்களுக்கு மேற்கு முகமாகக் காட்சியளித்தவர், அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்தத் தலத்திலேயே ஸ்ரீகுமரய்யா என்னும் திருப்பெயருடன் கோயில் கொண்டார்.

முருகனுக்கு முக்கனி பூஜை

இங்கே முருகப்பெருமான் அஸ்தமன வேளையில் முனிவர் களுக்குக் காட்சி தந்ததால், சூரிய அஸ்தமனத்துக்குப் பிறகே அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. திங்கள், வெள்ளி, கிருத்திகை ஆகிய நாள்களில் இரவு வேளைகளில் 33 வகையான திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. வைகாசி மாதம் கடைசி வெள்ளிக் கிழமையன்று மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளால் செய்யப்படும் முப்பழ பூஜை மிகவும் பிரசித்திபெற்ற பூஜையாகும்.

இங்கே ஸ்ரீகுமரய்யாவுக்கு சுத்த அன்னம் நைவேத்தியம் செய்யப்படுவதில்லை. பழங்கள், தேன் கலந்ததினைமாவு, வெல்லம் கலந்த பாசிப்பருப்பு, கைக்குத்தல் அரிசிஆகியவையே நைவேத்தியமாகப் படைக்கப்படு கின்றன.

பாம்பன் சுவாமிகள், திருவேகம் பத்தூர் கவி ராஜ பண்டிதர், எம னேஸ்வரம் ஜவ்வாது புலவர் ஆகியோர் இத்தலத்தில் அருளும் முருகனைப் போற்றிப் பாடியுள்ளனர். இங்கு முருகப்பெருமான் பல்துலக்கி விட்டு வலப்புறமாக வீசிய குச்சியே உடைமரமாக வளர்ந்து, கோயிலின் தலவிருட்சமாக அமைந்திருப்பதாக நம்பிக்கை.

முருகன் அருளால் முழங்கால் வலி தீரும்!

தீராத முழங்கால் வலியால் அவதிப்படுபவர்கள், இந்தக் கோயிலுக்கு வந்து குமரய்யாவை வேண்டிக் கொண்டு, மஞ்சள் பூசப்பட்ட உடைமரக் கால்களை (கவட்டையுடன் கூடியது) வாங்கி சமர்ப்பித்தால், நாள்பட்ட முழங்கால் வலி நீங்கி விடும் என்பது பக்தர்களது நம்பிக்கை.

மேலும் வயிற்று வலி, நெஞ்சு வலி ஆகிய பாதிப்புகளால் அவதிப்படும் அன்பர்கள், இங்கு வந்து மாவிளக்கு ஏற்றி வைத்து முருகப் பெருமானை வணங்கி வழிபட்டுச் சென்றால், விரைவில் அந்தப் பிரச்னைகள் தீரும் என்கிறார்கள்.

அதேபோல், குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் 48 நாள்கள் விரதம் இருந்து, கோயிலின் தலவிருட்சமான உடைமரத்தின் இலைகளைப் பிரசாத மாகப் பெற்று உண்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பதால், ஏராளமானோர் இந்த பிரசாதத்தை வாங்கி பயனடைந்துள்ளனர்.

மானாமதுரை தாயமங்கலம் ரோடு அலங்கார குளத்தில் அருள்பாலிக்கும்
ஒருங்கிணைந்த குலாலர் சமூக நலச்சங்கத்திற்கு பாத்தியப்பட்ட



# அருள்மிகு ஸ்ரீவைகை கரை அய்யனார் அலங்காரகுளம் ஸ்ரீ சேனையா சுவாமி

## திருக்கோவில் சார்பில்

கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள்
165வது அவதார விழாவிற்கு வருகை தரும்

**பக்தர்களே வருவ! வருக! என வரவேற்கிறோம்**





இறை பணியில்

ஸ்ரீ வைகைகரை அய்யனார் அலங்கார குளம் ஸ்ரீ சேனையா சுவாமி
திருக்கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர்


**V.காளீஸ்வரன்** தலைவர்

சாலிய வாகனன் மக்கள் இயக்கம் மாநில அமைப்பு செயலாளர்,
சிவகங்கை மாவட்டம், ஒருங்கிணைந்த குலாலர் சமூக நலசங்கம்,
நிர்வாகிகள் மற்றும் சங்க உறுப்பினர்கள், மானாமதுரை.

செல் 8110046517



aanmeegamalar.com



கட்டிக்குளம் தவத்திரு சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள்
165ம் ஆண்டு அவதார விழாவிற்கு வருகை தரும்
பக்தக்கோடிகளை வருக வருக என வரவேற்கிறோம்...



அன்புடன் உலக மக்கள் அனைவரும்
ஆனந்தமாக வாழவேண்டும்

# S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

## மரம், ஓடு வியாபாரம் & சாமில்

SAK **சீனியப்பா குரூப்ஸ்** SAK



எங்களிடம் ஒரிஜினல் (மர்மா), ஆஸ்திரிரேலியாவேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாரிகள் அணுகவும்.

SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்

## சீனியப்பா லாட்ஜ் A/C

## SAK திருமண ஹால்



S.ஆனந்தகிருஷ்ணன்
செல்: 98424 68256



A.குணா (எ) குணசீலன்
செல்: 98428 68256

172, பைபாஸ் ரோடு, மானாமதுரை,

9842868256



aanmeegamalar.com